Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 ஐப்பசி-11 27-10-2004 புதன்கிழமை ஓசை -252

க ணே சா ந கை ய க ம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-10478)



# சுவிஸ்.பிரஜையின் கொலைக்கு அரசே முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டும்!

## -விடுதலைப்புலிகள் மட்டு-அம்பாறை அரசியல்துறை சாடல்

**மட்டக்களப்பில் சுவிஸ் பிரஜை ஒருவர் தேசவிரோதிகளின் கைக்குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவத்திற்கான முழுப்பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும் என மட்டு-அம்பாறை அரசியல்துறை குற்றம் சாட்டியுள்ளது.**

இது குறித்து வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

கடந்த திங்கட்கிழமை அன்று இரவு மட்டக்களப்பு மாமாங்கத் தில் வசித்து வந்த சுவிஸ் நாட்டுப் பிரஜை ஹான்ஸ் ஹேர்ஸோக் என்பவர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத தேச விரோத சக்திகளின் கைக்குண்டுத் தாக்கு தலுக்கு உள்ளாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின் உயிரிழந் ததாக ஊடகங்கள் வாயிலாக அறிந்துள்ளோம்.

எமது விடுதலைப்போராட்டம் சர்வதேச மயப்பட்டிருக்கும் இக் கால கட்டத்தில் எமது உறுப்பி னர்கள் சர்வதேச நாடுகளில் எமது மக்களின் உண்மையான யதார்த் தமான அரசியல் அபிலாசைகளை வெளிக்கொண்டு வந்திருக்கும் இவ்வேளையில் இவ்வாறான மிலேச்சத்தனமான வன்முறைத் தாக்குதல்களையும், வன்முறை களையும் அரச கட்டுப்பட்டுப் பகுதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய விசா பெறச்சென்ற பிக்குவின் காவி அங்கி அகற்றல்

இம்மாதம் 25ஆம் திகதி கனேடிய தூதரகத்திற்கு கனேடிய விசா பெறுவதற்காகச் சென்ற மூன்று பிக்குமார்களின் வெளிநாட்டுக் கடவுச் சீட்டில் வெள்ளைப் பவுடர் இருந்ததையடுத்து அந்திரக்ஸ் கிருமி என பயந்தமையால் கனேடிய பாதுகாப்புப் படையினர் மூவரின் காவி உடைகளை அகற்றி பின் அம்மூவரின் உடம்பை நீரினால் சுத்தம் செய்தனர் எனப் பிரான்ஸ் பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. இம்மூவரில் ஒருவர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர் என்றும் மற்ற இருவரும் இலங்கையைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

### - மானிப்பாய்ப் பகுதியில் -

## விநியோகிக்கத் தயார் நிலையிலிருந்த ஆபாசத் திரைப்படங்கள் பிடிபட்டன

(நல்லூர்)

விநியோகிப்பதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்த ஆபாசத் திரைப்பட வீடியோ சீடிகள் கொப்பிகள் பலவற்றை கலாசாரத் தைப் பேணும் குழுவினர் மானிப் பாய் வீடியோ கடையொன்றில் இருந்து கண்டு பிடித்துள்ளனர்.

நேற்று இத்திரைப்படங்கள் யாவும் குடாநாட்டின் பல பகுதி களுக்கும் விநியோகம் செய்யப் படுவதற்குத் தயார் நிலையில் இருந்தன.

கைப்பற்றப்பட்ட திரைப்படக் கொப்பிகள் அனைத்தும் மானிப் பாய்ச் சந்தியில் வைத்து பொது மக்கள் முன்னிலையில் கலாசா ரத்தைப் பேணும் குழுவினரால் தீயிடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

(33,41)

### - மாகாண சபை உறுப்பினர் மூலம் -

## அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க ஜே.வி.பி. யினர் புதிய திட்டம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான உள் முரண்பாடுகளின் தொடர்ச்சியாக ஜே.வி.பி.யினர் அரசாங்கத்திற்கு புதிய அழுத்தம் ஒன்றைக் கொடுக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

அதனடிப்படையில் அனைத்து மாகாணசபைகளில் இருந்தும் தமது 80 உறுப்பினர்களினதும் ஆதரவை விலக்கிக் கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் மாகாண சபை நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுக்க முடியுமெனவும், இதன் மூலம் மத்திய அரசாங்கத்தை ஸ்தம்பிக்க வைத்துத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த உத் தேசித்திருப்பதாகவும், ஜே.வி.பி. யினர் செயற்குழு கூடித் தீர்மானம் எடுத்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஜே.வி.பி.யின் குழுக்கூட்டமொன் றிலேயே இத்தீர்மானம் எடுக்கப் பட்டிருக்கிறது.

அரசாங்கம் புதிதாக நியமித்த 4 பிரதியமைச்சுப் பதவிகளினா லும் மற்றும் ஆறுமுகம் தொண்ட மானிற்குப் புதிதாக வழங்கப்பட வுள்ள அமைச்சுப் பொறுப்பும்,

(12 ஆம் பக்கம்பார்க்க)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் மனித எலும்புக்கூடு கண்டெடுப்பு

வடமராட்சி கிழக்கு வத்தராயன் பகுதியில் எலும்புக்கூடொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. வத்தராயன் வடக்குப்பகுதியில் தென்னைக்கு கிடங்குவெட்டும் போதே மனித எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது தாளையடி காவல்பணிமனையில் வைக்கப்பட்டுள்ளது. (11)

## ஆட்டோச் சாரதி கொலை தொடர்பாக மூவர் அடையாளம் காணப்பட்டனர்

(செட்டிகுளம்)

வவுனியாவில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட ஆட்டோச் சாரதி யின் கொலை தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் நேற்று வவுனியா நீதிமன்றில் வைத்து அடையாளம் காணப்பட்டனர் சந்தேக நபர்கள் நான்கு பேர் மாத்தளை ரத்தோட்டைப் பகுதிப் பொலிசாரால் கைது செய யப்பட்டனர் ரத்தோட்டை பொலி சாரால் வவுனியா நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டு நேற்றுக் காலை மேலதிக நீதவான் எஸ் சிற்றம்பலம் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்கு உட் படுத்தப்பட்டனர் இவர்களில் 1ஆம், 2ஆம், 3ஆம், எதிரிகளை சாட்சி அடையாளம் காட்டியுள் ளார் இவர்களை நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறும், விளக்கமறிய லில் இருக்கும் போது பொலிசார் விசா (12 ஆம் பக்கம் பார்க்க)



சந்தேக நபர் ஒருவர் அடையாளம் காண அழைத்துவரப்படுகிறார். (படம் மகா)

## நாவற்குழியில் வாகன விபத்தில் 14 பேர் படுகாயமடைந்தனர்

யாழ் - கண்டி வீதியில் நாவற்குழிப்பகுதியினில் இன்று பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி 14 பொதுமக்கள் படுகாயமடைந் துள்ளனர். சிலாபத்திலிருந்து யாழ். நகரப்பகுதி நோக்கி வந்து கொண்டி ருந்த ஹையஸ் வானொன்றும், மீன் பதப்படுத்தும் கூலர் வாகனமொன்றும் மோதிக்கொண்டுள்ளன. நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் குறித்த ஹையஸ் வான் மிக மோசமாக சேதடைந்தது.

படுகாயமடைந்த 14 பேரும் சிகிச்சைக்காக யாழ்.போதானா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடுள்ளனர். சிலாபத்திலிருந்து யாழ்.நோக்கி ஹையஸ் வாகனத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

### கிளி.முல்லை கல்வி மேம்பாட்டுப் பேரவை
### க.பொ.த.சாதாரணம் 2004 டிசம்பர்
### முன்னோடித் தேர்வு
### நேர அட்டவணை

| | | |
|---|---|---|
| 29-10- 2004 வியாழன் | 09.00 - 12.00 | விஞ்ஞானம் ii |
| | 01.30 - 2.30 | விஞ்ஞானம் i |
| 30-10-2004 சனி | 09.00 - 12.00 | கணிதம் ii |
| | 01.30 - 02.30 | கணிதம் i |
| 01-11-2004 திங்கள் | 09.00 - 10.00 | தமிழ் i |
| | 10.00 - 12.00 | தமிழ் ii |
| | 01.30 - 03.30 | தமிழ் iii |
| 02-11-2004 செவ்வாய் | 09.00 - 10.00 | சமூகக்கல்வி i |
| | 10.00 - 12.00 | சமூகக்கல்வி ii |
| | 01.00 - 04.00 | ஆங்கிலம் i,ii |

## தனி நபர் ஒருவருக்காக அரசியலமைப்பை மாற்றியமைப்பது ஏற்கக் கூடியதல்ல

### - பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

தனி ஒருவருக்காக அரசியலமைப்பை மாற்றிய மைப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர், நாட்டின் அரசியல் அமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்குப் பாரளுமன்றத்தில் மூன் றில் இரண்டு பெரும்பான்மையுடனேயே சர்வசன வாக்கெடுப்பை நடத்தமுடியும் எனினும் தற்போ தைய நாட்டிற்கான எவ்வித அவசியமும் இல்லா மல் அரசியலமைப்பை, தனி ஒருவரின் அரசியல் ஆயுளை அதிகரிப்பதற்காக இந்த அரசியலமைப்பு மாற்றம் என்பது அவசியமற்றது என அவர் குறிப் பிட்டார். சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டுமானால் அதற்கு சுமார் 700 மில்லியன் ரூபா தேவைப்படும், நாட்டின் தற்போதைய பொரு ளாதார நிலையில் இந்தத் தொகை செலவு என்பது மக்களைப் பாரிய பொருளாதார சிக்கலுக்கு இட்டுச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. சபாநாயகரை விலக்கி விட்டு வேறு ஒருவரைச் சபாநாயகராக நியமிப்பதற்கு தற்சமயம் அரசாங்கம் முயற்சித்து வருகிறது. இது முழுமையாக சட்டவிரோத நடவடிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### தவறிவிட்டது

கடந்த 20.10.2004 அன்று புதுக்குடியிருப்பு இளவேனில் வாணிபத்தில் துவிச்சக்கரவண்டி மாற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இல(57173452) தயவு செய்து இதனை சுவையூற்றிற்கு அருகாமையிலுள்ள கரன் கடையில் கொண்டுவந்து தந்து உங்களுடைய துவிச்சக்கர வண்டியினைப் பெற்றுக்கொள்ளவும்(5052)


## விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

கல்விப் பொது தராதரப் பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. இம் மாதம் 20 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என முன்னறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளும் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# ஒரே நாளில் அடையாள அட்டை விசேட கரும பீடத்தில் பெறலாம்

(நல்லூர்)

தேசிய அடையாள அட்டைகளுக்கு முதற் தடவையாக விண்ணப்பிப்பவர்கள் ஒரே நாளில் தேசிய அடையாள அட்டை விசேட கரும பீடத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியுமென ஆட்பதிவுத் திணைக்களம் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் விசேட கரும பீடம் ஒரே நாளில் தேசிய அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கையை நிறுத்தி இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

தற்போது முதற்தடவையாக 20 வயதுக்குட்பட்டவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை தொலைந்தவர்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் மாற்றங்களைச் செய்பவர்களும் வழமை போன்று ஒரு நாளில் பெறமுடியும் எனவும் தெரிய வருகின்றது.

ஒரே நாளில் கொழும்பில் உள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தில் இருந்து தேசிய அடையாள அட்டைகு விண்ணப்பிப்பவர்கள் கிராம அலுவலர்களின் வதிவிடச் சான்றிதழ்களை சமர்பிக்க வேண்டும் என்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (41)

## போரூட் நிதியுதவியுடன் மக்களுக்கு உதவித்திட்டங்கள்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலகர் பிரிவில் முள்ளிவாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் ஆகிய இரு கிராமங்களிலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் போரூட் நிறுவன நிதியுதவியுடனும் முல்லை. உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் பொதுமக்களுக்கு பின்வரும் உதவித் திட்டங்கள் 2004ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.

ரூபா 82450 பெறுமதிக்கு 17 குடும்பங்களுக்கு மீளவேய்தலுக்கும், ரூபா 118400 பெறுமதிக்கு 08 குடும்பங்களுக்கு பால்மாடு வளர்ப்பிற்கும், ரூபா 49000 பெறுமதிக்கு 05 குடும்பங்களுக்கு ஆடுவளர்ப்பிற்கும், ரூபா 39400 பெறுமதிக்கு 04 குடும்பங்களுக்கு நடமாடும் வியாபாரத்திற்கும், ரூபா 29550 பெறுமதிக்கு 03 குடும்பங்களுக்கு கடை வியாபாரத்திற்கும், ரூபா 322000 பெறுமதிக்கு 20 குடும்பங்களுக்கு கடற்றொழிலுக்கும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என நிறுவன இணைப்பாளர் செ.துஸ்யந்தினி தெரிவித்துள்ளார். (08)

## அடிக்கல் நாட்டல்

கிளி.வட்டக்கச்சி மகா வித்தியாலய நுழைவாயிலுக்கு அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் மு.ப. 11.30 மணியளவில் அதிபர் இ.சந்திரராஜா தலைமையில் நடைபெற்றது. நுழைவாயிலினை அமரர் வை.வீரபத்திரப்பிள்ளை ஞாபகார்த்தமாக அமரரது குடும்பத்தினர் அமைத்துக் கொடுக்கவுள்ளனர். நுழைவாயிற் கதவினை தி.சேகரன் குடும்பத்தினர் அமைத்துக் கொடுக்க உள்ளனர்.

நுழைவாயிலுக்கான அடிக்கல்லினை பாடசாலை அதிபர், பிரதி அதிபர், பாடசாலை அபிவிருத்திச் செயலாளர் மற்றும் வை.வீரபத்திரப்பிள்ளையின் மகள் பிரணவி போன்றோர் நாட்டி வைத்தனர். (12)

## முல்லை மாவட்டப் பட்டதாரிகள் நியமன ஆரம்ப விழா



முல்லை மாவட்டப் பட்டதாரிகள் 17பேருக்கு நியமனத்தின் ஆரம்ப விழா கடந்த 21ஆம் திகதி முல்லை மகா வித்தியாலய மண்டபத்தில் பதில் முல்லை மாவட்ட அரச அதிபர் கே.விஸ்வலிங்கம் தலைமையில் ஆரம்பமானது.

பொது ஈகச்சுடரினை முல்லை மகாவித்தியாலய உபஅதிபர் ஆ.குணநேசன் ஏற்ற தமிழீழ தேசியக்கொடியினை முல்லை மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சின்னண்ணை ஏற்றினார்.

மங்கல விளக்கேற்றலை முல்லை மாவட்ட பதில் அரச அதிபர் கே.விஸ்வலிங்கம் முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப்பொறுப்பாளர் முரளி, முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் ஞானம் ஆகியோர் ஏற்றினார்கள்.



வரவேற்புரையினை உதவி அரசஅதிபர் தலைமைப்பீட அதிகாரி செல்வி.ப.ஆரணி நிகழ்த்தினார்.

கருத்துரைகளை முல்லை மாவட்டக்கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், முல்லை மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சின்னன்ணன், முல்லைக்கல்வி வலயகல்விப் பணிப்பாளர் குருகுலராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

இப்பயிற்சி நெறியின் நோக்கம் தொடர்பாக பதில் முல்லை மாவட்ட பதில் அரச அதிபர் கே.விஸ்வலிங்கம் கருத்துரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து பட்டதாரிகளின் அறிமுகம் இடம்பெற்று பயிற்சி நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டன. முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலும் பயிற்சிகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக நன்றியுரையினை கச்சேரி நிர்வாக அலுவலர் இரத்தினராஜா நிகழ்த்தினார். (20)

## மின்னல்தாக்கி உயிரிழப்பு

மின்னல்தாக்கி விவசாயியொருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார். சிறிலங்காவின் ஜா-எல பகுதியில் சென்ற சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கை-உழவு இயந்திரம் மூலம் தமது வயலை உழுது கொண்டிருந்த இவர்கள் மீது மின்னல் தாக்கியதாகவும் இதனால் படுகாயமடைந்த இருவரும் ராகம வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்படும் போது ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

—————— புதுக்குளம் பிரதேச ——————

## தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு

(வவுனியா செய்தியாளர்)

புதுக்குளம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் ஈச்சங்குளம் பாடசாலையில் நடைபெற்றது.

ஈச்சங்குளம் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் இ. தனபால சிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன், வினோநோகரதலிங்கம், வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்.என்.ஜி.நாதன், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை உட்படப் பலர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் ஏற்றிவைத்தார். தொடர்ந்து சங்கம நிகழ்வுகள் இடம் பெற்றன. இறுதியாகச் சிறப்புரையை கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், ஞானவேல் அலை ஆகியோர் நிகழ்த்தினர். (10)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு புனர்நிர்மாணப் பணிகள்

(செட்டிகுளம்)

வவுனியா பூம்புகார்க் கிராமத்தில் தற்போது மீளக் குடியமர்ந்து வரும் மக்களுக்கான தேவைகளினை இனம் கண்டு தமிழர் புனர்வாழ்வு கழகம் நிகொட் திட்டத்தின் நிதியுதவியுடனும், உலக உணவுதிட்டத்தின் உதவியுடனும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. இதன் காரணமாக அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வரும் 130 குடும்பங்கள் நன்மை அடைந்து வருவதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வவுனியாக் கிளையினர் தெரிவிக்கின்றனர். வீதி புனரமைப்பு மதகுகள் கட்டுமானப் பணிகள் மலசல கூடம் கிணறு ஆழப்படுத்தல் கிணறு பாதுகாப்பு பக்கச் சுவர் கட்டுதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (21)

## சட்டவிரோதமாகப் பதுக்கப்பட்ட சாராயப் போத்தல்கள் பிடிபட்டன

வவுனியா மறவன்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் பதுக்கி வைத்திருந்தமையினை வவுனியா பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு அனுமதி பெறாமல் பதுக்கிவைத்திருந்த 380 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். இந்தப் போத்தல்கள் நேற்று வவுனியா நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (21)

## சிறுவர் போசாக்கை மேம்படுத்த மரக்கன்றுகள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

சிறுவர் போசாக்கை மேம்படுத்தும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், உலகதரிசன (வேள்விஷன்) நிறுவனமும் இணைந்து கிளி பரந்தன் பிரதேச உமையாள்புரம் கிராமத்தில் வீட்டுத்தோட்டத்திற்கான மரக்கன்றுகளை வழங்கியுள்ளன.

மேற்படி நிகழ்வானது நேற்று மாலை 4.00 மணியளவில் அக்கிராமத்தின் முன்பள்ளியில் மாதர் சங்கத்தலைவி வி.சாந்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பரந்தன் பிரதேச இணைப்பாளர் செ.கருணாகரன் உலக தரிசன நிறுவனத் திட்டஇணைப்பாளர் பிறேம்குமார். ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

தொடர்ந்து 500 ரூபா பெறுமதியான மரக்கன்றுகளை அதாவது தென்னை நான்கு, தேசிமரம் ஒன்று, மாமரம்ஒன்று என்பவற்றை பிறேம்குமார், செ.கருணாகரன்,கமக்கார அமைப்புத்தலைவர் க.செல்வரட்ணம் முன்பள்ளி ஆசிரியர் ஆகியோர் வழங்கினர். (சோ.கு)

## "நெடுங்காலத்தின் பின்னொரு நாள்" சிறுகதைத் தொகுதி வெளியீடு

(வவுனியா செய்தியாளர்)

விண்மணி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் பி.ரவிவர்மனின் "நெடுங்காலத்தின் பின்னொரு நாள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நிகழ்வு இன்று மாலை 4.00 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஐ.பி.சி செய்தியாளர் கனகரவி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை சலச அபிவிருத்தி வங்கி நிறைவேற்று உத்தியோகத்தர் த.பரமோகரனும் அறிமுக உரையை ஜனாப். நிலாமும், வெளியீட்டுரையை பத்திரிகையாளர் ஆறு.சுபாஸ்கரனும், சிறப்புரையை எழுத்தாளர் முல்லை மணி வே.சுப்பிரமணியமும் நிகழ்த்துவர். முதற் பிரதியை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வவுனியாத் தலைவர் க.ஏ.செந்தில்நாதன் பெற்றுக் கொள்வார். பதிலுரையை நூலாசிரியர் பி.ரவிவர்மன் நிகழ்த்துவார். (10)

—யாழ்.பல்கலை மாணவர்—

## புவியியல் சார் புள்ளிவிபரம் திரட்ட மன்னார் மாவட்டத்திற்கு சுற்றுலா

(மன்னார்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 3 ஆம் வருட புவியியல் பீடத்தின் 30 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் புவியியல் சார்பான புள்ளி விபரங்களைத் திரட்டுவதற்காக மன்னாரிற்கு கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் பீட விரிவுரையாளர் கலாநிதி சூசை ஆனந்தன் அவர்களின் தலைமையில் வந்துள்ள இவர்கள் பள்ளிமுனை கடலோரப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டனர். மேலும் இவர்கள் பேசாலை, தலைமன்னார் கிராமம், சிறுத்தோப்பு, பியர், வங்காலை, திருக்கேதீஸ்வரம் போன்ற இடங்களையும் பார்வையிட்டுச் செல்லவுள்ளனர். (மி)


### பாராட்டி வாழ்த்துகிறோம்

புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணி வன்னி மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பல வெற்றிக் கேடயங்களைச் சுவீகரித்து மிகச் சிறந்த கழகமாகத் திகழ்வதுடன் 25.10.2004இல் ஸ்கந்தாவி.கழகம் நடத்திய கால்பந்துப் போட்டி யில் சம்பியனைத் தனதாக்கிக்கொண்டது. இவ் அணி மேலும் பல வெற்றிகளை நிலைநாட்டுவதற்கு நாம் வீரர்களையும் கழகத்தையும் வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்,
புதுக்குடியிருப்பு கோம்பாவில் ரசிகர்கள்

(5053)

# இளைஞர் குழு-பொலிசார் கைகலப்பு

# தாய்லாந்தில் ஆறு பேர் பலி 10 பேர் காயம்

(பாங்கொங்)

**தாய்லாந்தில் இஸ்லாமிய இளைஞர் நடத்திய அமைதிப்போராட்டம் இறுதியில் பெரும் கலவரத்தில் முடிந்துள்ளது. இதன்போது 80 பேர் உயிரிழந்துள்ளதோடு பலர் காயமடைந்துள்ளனர்.**

இது பற்றி மேலும் தெரியவருகையில், கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் தங்களுக்கு முன்னுரிமை அளிக்கக்கோரி தாய்லாந்தில் உள்ள இஸ்லாமிய இளைஞர்கள் போராடி வருகின்றனர்.

போராட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள 6பேரை விடுவிக்கக்கோரி அந்நாட்டின் லாசிவாட் மாகாணத்தில் நேற்று முன்தினம் சுமார் ஆயிரத்தி ஐநூறு இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்குள்ள காவல் நிலையத்தைப் போராட்டக்காரர்கள் முற்றுகையிட முற்பட்டனர். இதனைப் பொலிசார் தடுத்தபோது இருதரப்பினரிடையேயும் பெரும் கலவரம் மூண்டது. இதன்போது பொலிசாரின் தாக்குதலில் 80 பேர் கொல்லப்பட்டதோடு பலர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் பலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் கொல்லப்பட்டுள்ளனர்.



அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தேர்தல் பிரச்சாரத்தின் போது. ஆதரவாளர்களுக்கு கைலாகு கொடுக்கிறார்.

## விமானவிபத்தில் 10பேர் பலி

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வேர்ஜினியாவில் சிறிய விமானமொன்று வீழ்ந்து நொருங்கியது. இதன்போது அதில் பயணம் செய்த 10பேரும் உயிரிழந்துள்ளனர். விபத்து இடம்பெற்ற வேளை கடும் பனிமூட்டம் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## அமெ.நாணயத்தைப் பாவிக்க கியூபாவில் தடைவிதிப்பு

கியூபாவில் அடுத்தமாதம் 8ஆம் திகதி தொடக்கம் அமெரிக்க நாணயத்தின் புழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமென்று கியூபா சனாதிபதி பிடல்கஸ்ரோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் அமெரிக்கா தமது நாட்டின் மீதான தடைகளை மேலும் இறுக்கியதால் இவ்வாறு செய்வதாகவும் கஸ்ரோ தெரிவித்துள்ளார்.

இதனைத் தொலைக்காட்சியூடாக நாட்டுமக்களுக்கு அவர் அறிவித்துள்ளதுடன் இந்த உத்தரவை அமுல் செய்வது முக்கியமான விடயமெனவும் கூறியுள்ளார்.இதன் பிரகாரம் கியூபா நாட்டு மக்களும் வெளிநாட்டுப் பிரஜைகளும் உள்ளூர் நாணயத்தைப் பயன்படுத்தவேண்டுமென மத்திய வங்கி அறிவித்துள்ளது.

சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்த பின்னர் கியூபாவின் டொலர் சட்ட ரீதியாக அங்கிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



காஸாவில் இஸ்ரேலிய உலங்கு வானூர்தியின் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளான பலஸ்தீனரின் கார் ஒன்று.

## -அமெரிக்க சனாதிபதித் தேர்தல்

## ஜோன் ஹெரிக்கு ஆதரவாக கிளின்டன் பிரச்சாரம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரம் [illegible] பிடித்துள்ளன.

இதன் உச்சக் கட்டமாக முன்னாள் சனாதிபதி பில் கிளின்டன் சனநாயக் கட்சி வேட்பாளரான ஜோன்ஹெரிக்கு ஆதரவாக பிரசாரப் பணிகளில் களமிறங்கியுள்ளார்.

இதன் போது அமெரிக்காவைக் கட்டியெழுப்புவதற்கு ஜோன் ஹெரியிடம் சிறந்த திட்டங்கள் இருப்பதாக பில் கிளிண்டன் நேற்று முன்தினம் பென்சில் வேனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

சனநாயகக் கட்சியின் கொள்கையின் படி பொறுப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் பகிர்ந்து உலகில் சிறந்த ஓர் இடத்தை அமெரிக்காவிற்கு ஏற்படுத்திக் கொடுப்பதே ஜோன்ஹெரியின் வெளிநாட்டுக் கொள்கையாக உள்ளதெனவும் கிளிண்டன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜோன்ஹெரியும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்சைக் கடுமையாக விமர்ச்சித்துளளார்.

இதேவேளை ஈராக்கை அமெரிக்கா கைப்பற்றியதன் பின்னர் அங்கு 350 தொன் வெடி வெடி பொருட்கள் காணாமற் போனதற்கு புஷ் நிர்வாகம் அனுமதி அளித்ததாகவும் ஜோன் கெரி கூறினார்.

## இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் நிரூபிக்கப்படின் அமைப்பு தடைசெய்யப்படும்

-இந்தோனேசிய புதிய அதிபர் தெரிவிப்பு

தென்கிழக்காசியாவில் இடம் பெற்ற பல குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பை தமது அரசாங்கம் தடைசெய்யும் எனவும், ஆனால் அப்படியொரு அமைப்பு இருக்கின்றது என்பதையும் அதன் உறுப்பினர்கள் பயங்கரவாத செயல்களை மேற்கொண்டார்கள் என்பதையும் நிரூபிக்க வேண்டுமென இந்தோ னேசியாவின் புதிய சனாதிபதி யுதொ யோனோ தெரிவித்துள்ளனார்.

சனாதிபதி யுதொயோனோ "ஜமா இஸ்லாமிய" என்ற அமைப் புப் பற்றி ரைம்ஸ் சஞ்சிகைக்கு பேட்டியளித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்தைக் கையாள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினை மறு பரீசிலனை செய்யப்போவதாக தெரிவித்துள்ளனர். "ஜமா இஸ்லாமியா" குறித்து அவர் அவதானமான கருத்துக்களை கூறியிருப்பது மேற்குலகத்தை அதிருப்தியடையச் செய்ய லாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறன்றது.

## 300 பேர் கைது

இணையத்தளங்கள் மற்றும் செல்லிடத்தொலைபேசிகளினூடாக ஆபாசப் படங்களைப் பரப்புவோருக்கெதிராக நடவடிக்கையை சீனா தீவிரப்படுத்தியுள்ளது.

இதற்காக நூற்றுக்கணக்கான இணையத் தளங்களை செயலிழக்கச் செய்துள்ளதுடன் இவற்றுடன் தொடர்புபட்ட 300 பேர் சீனப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



சீனா நிலக்கரிச் சுரங்க மீட்புப் பணியாளர்கள்

## குடியுரிமை வழங்க சவுதி முடிவு

சவுதி அரேபியாவில் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு குடியுரிமை வழங்கப் போவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

வெளிநாட்டவருக்குக் குடியுரிமை வழங்குவது தொடர்பான சட்ட திருத்தம் சவுதி அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட பட்டாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

## அடுத்த ஆண்டுமுதல் சிங்கப்பூரில் இலத்திரனியல் கடவுச் சீட்டு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் அரசாங்கம் அடுத்த ஆண்டு முதல் இலத்திரனியல் கடவுச் சீட்டுக்கள் அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்தக் கடவுச் சீட்டில் விரல் அடையாளங்கள் உள்ளிட்டபல முக்கிய அம்சங்கள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவின் புதிய எல்லைப்பாதுகாப்பு சட்டதிட்டங்களை அனுசரிக்கும் வகையில் இலத்திரனியல் கடவுச்சீட்டு அறிமுகப்படுத்துவதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் உள்ளிட்ட 27 நாடுகள் அமெரிக்காவுடன் விசா உடன் படிக்கையினைச் செய்துள்ளது. இந்த உடன் படிக்கையின் பிரகாரம் அடுத்த ஆண்டு ஒக்டோபர் 26ஆம் திகதிக்கு முன்னர் தனிநபர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய புதிய கடவுச்சீட்டுக்களை விநியோகிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின்னர் இந்த நடைமுறை அமுல் செய்யப்பட்டது.

## துனிசிய சனாதிபதி மீண்டும் வெற்றி

துனிசியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் சனாதிபதி ஸின் அல்-அபிடீன் பேன்அலி 94 சதவீதமான வாக்குகளைப் பெற்றுத் தனது 17 வருடகால ஆட்சியை மேலும் 5 வருடங்கள் நீடித்துள்ளார். 1956 இல் பிரான்சிடமிருந்து துனிசியா சுதந்திரமடைந்த பின்னர் பல கட்சி அரசியலுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அரசாங்கத்திற்கெதிரானவர்களை அடித்துச் சிறையிலடைத்துக் கட்டுப்படுத்தி ஊடகங்களைத் தணிக்கை செய்யும் பொலிஸ் நாட்டின் உண்மை நிலையை மறைத்துள்ளது. என எதிர்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.



தெற்கு ஜப்பானில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் மீட்பு நடவடிக்கைகளாக பிளாஸ்ரிக் மிதவை ஒன்றை இழுத்துவரும் மீட்புப் பணியாளர்கள்.

## ஈராக்கிலிருந்து தடைசெய்யப்பட்ட வெடிபொருள் படையெடுப்பின்போது இடம் மாற்றப்பட்டது

-ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு

(நியூயோர்க்)

ஈராக்கில் சுமார் 377தொன் தடை செய்யப்பட்ட வெடிபொருட்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இச் சம்பவமானது அமெரிக்கா ஈராக் மீது படையெடுப்பு நடத்திய காலப்பகுதியில் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனைப் பெரும்பாலும் அல்-ஹைய்தா போராளிகளே எடுத்துச் சென்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை ஈராக் இடைக்கால அரசினால் உருவாக்கப்பட்டு வரும் படையினர் மீது அண்மையில தாக்குதல் நடத்தி 49பேரைக்கொன்றது. அல்-ஹைதாவிற்கு ஆதரவான -அல் சர்கா என்ற போராளிக்குழு ஒன்று கூறப்படுகிறது.

இஸ்லாமிய இணையத்தளம் ஒன்றினூடாக இக்குழு இத்தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலுள்ள பிரதான வீதியில் அல்-சர்கா போராளிகள் ஈராக் காவல்துறையினரின் சீருடைகள் தரித்து காவல் துறையினர் போல் செயற்பட்டு படையினர் பயணித்த பேருந்துகளை வழிமறித்து சோதனையிடப் போவதாக அறிவித்துவிட்டு சுட்டுக் கொன்றது தெரிந்ததே.

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற முல்லை நகர்ப்பகுதியில் அறிவுறுத்து

## இரு உணவகங்களும் தற்காலிகமாக மூடப்பட்டன

(முல்லை)

**தமிழீழ சுகாதார சேவையின் முல்லை மாவட்டப் பொறுப்பாளர் நாயகன் தலைமையிலான 8பேர் கொண்ட குழு முல்லை நகரில் உள்ள உணவகங்கள், பலசரக்குக் கடைகள், சந்தை போன்ற இடங்களில் கடந்த வியாழக்கிழமை திடீர் சுகாதார பரிசோதனை நடத்திய போது சுகாதார முறைகள் பேணப்படாத இரு உணவகங்கள் மூடப்பட்டன.**

பல வியாபார நிலையங்களில் காலாவதியான பிஸ்கட் வகைகள். குழந்தைகளுக்கான பால்மா வகைகள் டிப்பி டிப்பி, தகர ரின்களில் பொதி செய்யப்பட்ட 'மீன்ரின்' போன்றன கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

அத்துடன் வெயிலில் வைக்கப்பட்டுள்ள மென்பானம், கண்டோஸ் என்பன வெயிலில் வைக்காது விற்பனை செய்யப் பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டது

சுகாதார முறைப்படி இல்லாத நிலையிலேயே இரு உணவகங்கள் தற்காலிமாகப் பூட்டப்பட்டதுடன் ஏனைய உணவகங்களில் சமைத்த உணவை விற்பனை செய்வதனால் சுகாதார முறைப்படி விற்பனைசெய்யப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தல் விடப்பட்டது.

சுகாதாரமுறைப்படி சகல தேவைகளையும் உணவகங்களில் மேற்கொள்ளும் வரை தற்காலிகமாக மூடப்பட்ட கடைகள் திறக்க முடியாது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்தனர்.சில கடைகளில் மலசலகூடம், கிணறு என்பன குறிக்கப்பட்ட தூரத்தில் இல்லாததையும் அவதானிக்கப்பட்டு அவற்றை மூடிவிடுமாறும் பணிக்கப்பட்டது.

அத்துடன் சம்பந்தப்பட்ட சந்தைப் பகுதியில் இறைச்சி வெட்டப்பட்டு, விற்பனை செய்யுமிடத்தில் சிறிய புழுக்கள் அவதானிக்கப்பட்டதுடன் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையங்கள் தமது வர்த்தக நிலையங்களின் இறுதிக்கழிவினை வெற்றுக் கொள்கலன்களில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வர்த்தகர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

பிற்பகல் 3.00 மணிக்கு வர்த்தக சங்கத்தின் மாதாந்தக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட இக் குழுவினர் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கினையும் நடாத்தினார்கள்.இந்த நடவடிக்கையை தமிழீழ சுகாதாரசேவை மாவட்டப் பொறுப்பாளர் நாயகன், கரைதுறைப்பற்று பிரதேச சபை அதிகாரி இ.கிருஷ்ணபிள்ளை, தமிழீழ சுகாதார சேவையின் உணவு மருந்து ஆய்வாளர் இராமலிங்கம்,தமிழீழ சுகாதார சேவையின் முல்லைப் பிரதேச இணைப்பாளர் சுரேஸ், முல்லைத்தீவு பொது சுகாதார பரிசோதகர் குணராஜன், ஏனைய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(20)

## நிதி ஒதுக்கீடு

சிறிலங்கா விமானப்படையின் தாக்குதலில் சேதமடைந்த மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன் ஆட்காட்டி வெளி புனித அந்தோனியார் ஆலயத்தைத் திருத்துவதற்கு வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் 40 ஆயிரம் ரூபாயினையும், நானாட்டான் புதிய வீட்டுத் திட்டத்திலுள்ள சிறி விநாயகர் ஆலயத்திற்கென 25 ஆயிரம் ரூபாவையும் தனது பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.(மி)

## கட்டாக்காலி கால்நடைகளால் கீச்சிக்குள விவசாயிகள் கவலை

(முள்ளியவளை)

கட்டாக்காலி கால்நடைகளினால் கூழா முறிப்பு கீச்சிக்குள விவசாயிகள் பயரழிவுகளைச் சந்தித்து வருவதாக தெரிவிக்கின்றனர். அப்பகுதியில் நெற்பயிர்களை, கட்டாக்காலி கால்நடைகள் இரவு பகல் வேளைகளில் கூட்டம் கூட்டமாக வயல் வெளிகளில் புகுந்து நாசம் செய்து வருவதாகவும், சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப் படுத்தியும் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை எனவும், தமது அவலத்தை சம்பந்தப்பட்ட துறையினர், அதிகாரிகள் உடனடியாகத் தீர்த்து தமது நெற்செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் விவசாயிகள் கேட்டுள்ளனர். (ஆ)

## காணி உரிமைப் பத்திரம் வழங்கல் நாளை நடைபெறும்

(அலுவலக செய்தியாளர்)


மாகாணக் காணி ஆணையாளரின் அனுமதியுடன் அனுமதிப்பத்திரம் இல்லாதிருந்த திருநகர் கிராமக் காணி உரிமையாளர்களுக்கு காணி உரிமைப் பத்திரம்(எல்.டி.ஓ பொமிற்) வழங்கும் நிகழ்வு நாளை 28ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.திருநகர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் அன்றைய தினம் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை மேற்படி காணி உரிமைப் பத்திரம் வழங்கப் பெறவுள்ளது.

கிளி/ அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு காணி உரிமையாளர்கள் 57 பேருக்கு காணி உரிமைப் பத்திரங்களை வழங்கிவைக்கவுள்ளார்.

எனவே ஏற்கனவே அறிவிக்கப்பெற்றுள்ள 57 காணி உரிமையாளர்களும் அன்றைய தினம் சமுகம் கொடுத்து காணி உரிமைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி வேண்டியுள்ளார். (சோ.கு)

## சமூகப்பணி புரிந்தோர் திருவள்ளுவர் விழாவில் கௌரவிப்பு

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தினரால் அண்மையில் நடாத்தப்பெற்ற திருவள்ளுவர் விழாவின் போது சமூகத்தொண்டு கலைத்தொண்டு மற்றும் தமிழ்மொழியின் நடைமுறையினை பின்பற்றியவர்களுக்கு தங்கப்பதக்கம் சூட்டி பொன்னாடை போர்த்திக்கௌரவிக்கப் பெற்றனர்.




இசைத்தொண்டாற்றியமைக்காக சங்கீத பூசணம் கு.தியாகராசா, போர் அனர்த்த காலங்களில் வைத்திய பணியுடன் அல்லும், பகலும் மக்கள் தொண்டு புரிந்தமைக்காக முன்னாள் கிளி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ச.விக்னேஸ்வரன், திருக்குறள் தமிழ் முறையில் ஓதி திருமணம் செய்தமைக்காக ப.சோழன், தமிழீழ விடுதலைப்போரில் இரு மாவீரர்களை ஈந்தமைக்கு சு.சரசுவதி ஆகியோர் அன்றைய தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வைத்து தங்கப் பதக்கம் சூட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றமைகுறிப்பிடத்தக்கது. (சோ)

## மாடுகளை இறைச்சிக்காக வெட்டுதல் முல்லை மாவட்டத்தில் மட்டும் தடை!

### தமிழீழ சுகாதார சேவை அறிவிப்பு

முல்லை மாவட்டத்தில் கால் வாய் நோய் அதிகமாகக் காணப் படுவதால் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பளர் நாயகன் தெரிவித்தார்.

அண்மையில் தடை நீக்கப்பட்டதாக வெளியான அறிவித்தல் கிளிநொச்சி மாவட்டத்திற்கே பொருந்தும் என்றும், முல்லைத்தீவு மாவட்டத்திற்குப் பொருந்தாது என்றும், இத்தடையை மீறி முல்லைத்தீவு மாவட்டத்தில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20)

## காலபோக நெற்செய்கைக் கடனுதவி

முல்லைத்தீவு கிராமிய அபிவிருத்தி வங்கியினால் 2004/2005 இற்கான காலபோக நெற்செய்கைக்கென விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.கடந்த 18.10.2004-21.10.2004 வரை ஒட்டுசுட்டான் நெடுங்கேணிப் பிரதேசங்களைச் சேர்ந்த தொண்ணூறு விவசாயிகளுக்கு பதினைந்து இலட்சத்து நாற்பது ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இக்கடன் வழங்கலுக்கான முன்னோடி கருத்துரைகள் ஒட்டுசுட்டான் பிரதேச கடன் அலுவலர் து.சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் முல்லைக்கிராமிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.பாபுவும் த.பொ.மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் தயாபரனும் கலந்து கொண்டனர். (05)

## திருநகர் வீதியைப் புனரமைப்பது அவசியம்!

### -பொது மக்கள் தரப்பில் வலியுறுத்து


(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் இருந்து 10இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைப்பு எதுவுமின்றி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.


மேற்படி வீதியானது பாரிய குன்றும், குழியுமாக உள்ளமையினால் தற்போது பெய்து வரும் மழை காரணமாக இவ் வீதியில் குளம் போன்று நீர் தேங்கி நிற்பதையும் அதனால் அவ் வீதியூடாகப்பயணிக்கும் சகல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் மற்றும் உத்தி யோகஸ்தர்களும் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே பயணித்து வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

நகர்ப்பகுதியிலிருந்து திருநகர் வீதியூடாக ஜெயந்திநகர், 8ஆம் வாய்க்கால், சேவியர் கடைச்சந்தி, ஜெயந்திநகர், செல்வா நகர், உருத்திரபுரம் மற்றும் அயல்க் கிராமங்களைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் இவ் வீதியூடாகவே தினமும் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டு பயணங்களை மேற்கொண்டு வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

முக்கிய போக்குவரத்து வீதியான மேற்படி வீதியினை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களைப் போக்கிட முன்வர மாட்டார்களாவென வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ.கு)



கிளிநொச்சி திருநகர் பிரதானவீதி.



ஜெயந்திநகர் வீதி



சேவியர்கடைச்சந்தி வீதி

# நம்பியிருந்த தமிழ் மக்களுக்கு இந்திய அரசு துரோகமிழைத்தது

## -யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் சிறந்ததொரு எதிர் காலத்தைப் பெற்றுக் கொடுப்பதில் இந்திய அரசு தன் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் என நம்பியிருந்த தமிழ் மக்களுக்கு அது துரோகம் இழைத்து விட்டது. என யாழ்.மாவட்ட அரசியல் துறைத்துணைப்பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இந்திய இராணுவத்தினரால் நடத்தப்பட்ட விமானத்தாக்குதலில் பலியான 40இற்கும் மேற்பட்ட பொதுமக்களின் 17ஆவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்கள பேரினவாதிகளால் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள தமிழனத்தின் விடிவிற்காக இந்திய அரசு தமிழ் மக்களுக்குச் சாதகமானதொரு முடிவை வெளிப்படுத்தும் என தமிழ் மக்கள் நம்பியிருந்த வேளை இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழர் தாயகப்பகுதிகளில் கால் வைத்த இந்திய அரசின் அமைதிப்படைகள் தமிழ் பிரதேசங்களில் இடம்பெறும் வன்செயல்களைத் தடுத்து நிறுத்தாது பேரினவாத அரசுடன் சேர்ந்து நின்று தமிழன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமிழ் மக்களை மோசம் செய்தது.

அமைதி காக்கும் படையென வந்திறங்கிய இந்தியப்படைகள் கொக்குவில் பிரம்படி வீதிப் படுகொலை, யாழ்.போதனா வைத்தியசாலைப் படுகொலை என்பவற்றைப் புரிந்ததுடன் தியாகிதிலீபன், குமரப்பா புலேந்திரன் போன்ற தமிழின விடுதலை வீரர்களின் இழப்பிற்கும் காரணமாக அமைந்தன.

இவ்வாறு தமிழ் மக்கள் வாழ்வில் நெருப்பை விதைத்த இந்தியா தற்போது அமைதி முயற்சிகளுக்கும் இடையூறு தரும் விதத்தில் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டு வருவது வருந்தத்தக்கது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

## பயிற்சி வகுப்புக்கள்

அரச சேவையில் உள்ள பட்டதாரிகள் சங்கம் இலங்கை நிர்வாக சேவை 2001இற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்களினை ஏற்பாடு செய்துள்ளது.

வன்னிப் பிரதேசத்தினைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ள வசதியாக சனிக்கிழமைகளில் பி.ப 3.00 மணிக்கும், ஞாயிற்றுக்கிழமைகளில் மு.ப 9.00மணிக்கும் யாழ். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும் இவ் வகுப்புக்களில் பரீட்சைக்கு தோற்றத் தகுதியுடைய (அங்கத்தவர் அல்லாத) அனைவரும் கலந்த பயனடையுமாறு சங்கச் செயலாளர் தெரிவித்தார். இவ் வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெறுகின்றன. (33)

# கோப்பாய்ப் பகுதியில் பாத்தீனியம் செடி

(அலுவலக செய்தியாளர்)

சூழல்பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலாக விளங்கும் பாத்தீனியம் செடிகள் யாழ்.கோப்பாய்ப் பகுதியில் பெருமளவில் உள்ளதனைத் காணக்கூடியதாக உள்ளது.

மேற்படி செடியானது கோப்பாய் கிருஷ்ணன்கோவில், மற்றும் அதனை அண்டிய பகுதிகள், பொது மயானம் போன்ற பகுதிகளில் பெருமளவில் காணப்படுகின்றது.

சூழற் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்கும் மேற்படி பாத்தீனியச் செடியினை அழிப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப் படாமையினையிட்டு அப்பகுதி மக்கள் தங்கள் ஆதங்கத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். (சோ)

# திருடர்களின் அச்சுறுத்தல் மிகுந்த நல்லூர் - இராமலிங்கம் வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூரில் உள்ள இராமலிங்கம் வீதியில் வீதி மின் விளக்குகள் எதுவும் பொருத்தப் படாது காணப்படுவதால் அப்பகுதி வீதி இரவு நேரங்களில் திருடர்களின் அச்சுறுத்தல் மிகுந்த இடமாகக் காணப்படுகிறது.

இதன் காரணமாக இரவு நேரங்களில் இவ்வீதியூடாகப் பயணிப்பதற்கு மக்கள் பெரிதும் அஞ்சுகின்றனர். எனினும், இது குறித்து உரிய தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்காததை இட்டு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# யாழ்.பல்கலை விஞ்ஞான பீடத்தின் விஞ்ஞானக் கண்காட்சி நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கழைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் 30 ஆவது ஆண்டின் நிறைவை ஒட்டி விஞ்ஞான பீடத்தினால் நடத்தப்படுகின்ற மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சியானது நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஆரம்பமானது இந் நிகழ்வின் முதல் நிகழ்வாக யாழ்பாண பல்கலைக்கழகத்தின் கொடியை முன்னாள் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்து இளைப்பாறிய இந் நிகழ்வின் பிரதம விருந்தினராகிய பேராசிரியர் குணரட்ணம் ஏற்றி வைத்தார். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் கொடியை விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து பொதுச் சுடரினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், பிரதம விருந்தினர் பேராசிரியர் குணரட்ணம், பேராசிரியர்கந்தசாமி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் மோகனதாஸ், பேராசிரியர் குணரட்ணம் ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன. அதனை தொடர்ந்து இந் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் குணரட்ணம் நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் பேரசிரியர்கள் விரிவுரையாளர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். ஆரம்ப நிகழ்வாக தொடர்ந்து பெருந்தொகையான மாணவர்கள் கண் காட்சியைப் பார்வையிட்டனர்.(36)

# வல்வைப் பாலத்தின் ஒரு பகுதி இடிந்தது போக்குவரத்து முற்றாகத் துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

குடா நாட்டின் வடமராட்சியினையும் வலிகாமப் பகுதியினையும் இணைக்கும் முக்கிய பாலமான வல்வைப் பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தமையால் நேற்றுப் பிற்பகலுடன் போக்குவரத்துக்கள் முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

இலங்கையின் ஒல்லாந்தர் ஆட்சிக் காலப் பகுதியில் கட்டி முடிக்கப் பட்ட இப்பாலம் சுமார் இரண்டு நூற்றாண்டு கால வரலாற்றை கொண்டது. முற்றாக செங்கல்லினால கட்டப்பட்ட இப்பாலம் சுமார் 250 மீற்றர் நீளம் கொண்டதுமாகும்.

1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல்வேறு காலப் பகுதிகளிலும் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் பெரும் சேதத்திற்கு உள்ளாகியிருந்தது எனினும் தற்காலிகமாகத் திருத்தம் செய்யப் பட்டே இப் பாலம் தொடர்ந்து பாவிக்கப்பட்டு வந்திருந்தது.

இந்நிலையில் மணல் ஏற்றி வந்த பாரஊர்தி ஒன்று பாலப் பகுதியின் மேலாக பயணித்த வேளை பாலம் நேற்று நண்பகல் இடிந்துள்ளது. அத்துடன் பாரஊர்தியும் புதையுண்டுள்ளது. இதையடுத்து அப்பாலமூடான போக்கு வரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. பயணத்தை தொடர முடியாத நிலையில் நூற்றுக் கணக் கான வாகனங்கள் அப் பகுதியில் தரித்து நின்றிருந்தன.

இதேவேளை தென்மராட்சி ஊடான மாற்று வழிகளூடாக வடமராட்சிப் பகுதிக்கான போக்கு வரத்து சேவைகள் இடம் பெற்று வருகின்றன. (27)

## நூல்அறிமுக விழா

கலாநிதி ம.இராகுநாதனின் ஈழத்து தமிழீழ நூல்களில் சமுதாய சிக்கல் என்னும் நூல் அறிமுகவிழா வரும் (வியாழக்கிழமை) மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது. இந் நிகழ்வின் வாழ்த்துரையை பேராசிரியர் மோகனதாஸ், பேராசிரியர் சிவச் சந்திரன், போராசிரியர் சிற்றம்பலம் ஆகியோரும் அறிமுகவுரையை கலாநிதி திருநாவுக்கரசும், வெளியீட்டு உரையை கலாநிதி கமலநாதன ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# சட்டவிரோதமாக பனை தறிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## த.பொ.மே.நிறுவனம் அறிவிப்பு

யாழ்.தென்மராட்சிப் பகுதிகளில் பயன் தரும் பனை மரங்களை சட்ட விரோதமாகத் தறித்தழிப்போர் மீது கடும் நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பனை வளத்தை நம்பி வாழ்வோர் தொகை அதிகமுள்ள தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம் பெறும் பனை வள அழிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் நோக்குடனேயே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து இத்தீர்மானத்தை எடுத்துள் ளன. இந்த அடிப்படையில் அனுமதி இன்றிப் பனை மரங்களை தறிப்போர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.(33)

# நிதிநிறுவனங்கள் குறித்த சரியான தகவலை மக்களுக்கு ஊடகங்கள் தெரிவிக்கவில்லை

## -கொழும்பு கருத்தரங்கில் குற்றச் சாட்டு

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் பொதுமக்கள் வைப்புச் செய்கின்ற போதும் அல்லது செய்த பின்னரும் அவர்களுக்குக் குறிப்பிட்ட நிதி அமைப்புகள் தொடர்பில் உரிய சரியான தகவல்களைத் தருவதற்கு ஊடகங்கள் தவறியுள்ளன என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

ஏற்கனவே செயலிழந்து போயுள்ள பிரமுகர் போன்ற வங்கித் தொடர்பில் ஊடகங்கள் தமது உரிய பங்கை வாடிக்கையாளர்களான பொதுமக்களுக்கு நிறைவேற்றவில்லை என இந்த குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கொழும்பில் நடைபெற்ற நிதிதொடர்பான ஊடகங்களின் பங்கு என்ற தொனியிலான கருத்தரங்கில் இந்தக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டது.

# அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கருணா குழுவினரின் முகாம்கள்

## - முன்னாள் அமைச்சர் ரவூப்ஹக்கீம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள கருணா அணியினர் தமது முகாம்களை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைத்திருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஆயுதம் தாங்கிய கருணா அணியினரால் பொலநறுவை சேனப்புரப் பகுதியில் முகா மொன்று அமைக்கப்பட்டிருப் பதாகத் தனக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக ரவூப்ஹக்கீம் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

அண்மையில் திரும்புலாகல பிரதேசத்திலே அத்துகல என்ற கிராமத்தில் இரண்டு முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அப்பிரதேசத்திற்குத் தான் விஜயம் செய்தபோது அந்தக் கிராமத்துக்கு அண்மையிலே இருக்கின்ற கட்டுவான்வில சேனப்புர போன்ற முஸ்லிம் கிராமங்களுக்கும் மக்கள் தன்னை அழைத்துச் சென்றதாகவும், அங்கே இருக்கின்ற மக்கள் மிகவும் பீதியடைந்த நிலையியே இருப்பதாகவும், அவர்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடு களிலிருந்து தெரிந்து கொண்டேன். குறிப்பாக சேனபுர என்ற கிராமத்துக்கு அண்மையில் இருக்கின்ற காட்டை அண்டிய ஒரு சுற்றுப்பிரதேசத்தில் இனந் தெரியாத பயங்கரவாதத் குழுவொன்று முகா மிட்டிருப்பதாக மக்கள் முறைப்பாடுகள் செய்தார்கள். இக் குழுவினர் கருணா குழுவினராக இருக்கக் கூடும் என்றும் மக்கள் முறையிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.!

# மாமாங்கத்தில் கைக்குண்டு வீச்சு சுவிஸ் பிரஜை உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாமாங்கத்தில் நேற்றிரவு இடம்பெற்ற கைக் குண்டுத் தாக்குதலில் சுவிஸ் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவரது விபரங்கள் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்திற்கு தெரிவிக்கப்பட்டதாக கிழக்குப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

அத்துடன் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த சில வருடங்களுக்கு முன்பு இலங்கை வந்த இவர் மட்டக்களப்பிலே ஒரு தமிழ்ப் பெண்ணைத் திருமணம் செய்திருந்தார்.

இவர் நேற்று முன்தினம் வீட்டில் இருந்த வேளையிலேயே இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலிலே உயிரிழந்தார். வெளிநாட்டுப் பிரஜை என்ற காரணத்தினால் இவரது சடலத்தை சுவிற்சர்லாந்திற்கு அனுப்புவதா இல்லையா? என்ற முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

# ஆதவனின் அனுபவப் பகிர்வு

என் அன்பு வாசகர்களே...!

இத்தாலியில் ஒரு உணவு விடுதியில் நிற்கிறேன். ஒரு PIZZA இற்கு "ஓடர்" கொடுத்து விட்டு நான் அவமானப்பட்ட விசயமொன்று சொன்னேனே அது நடக்கப் போகிறது.

அந்த உணவு விடுதியின் பணியாள் ஒரு பெரிய PIZZA வைக் காவிக்கொண்டு வந்தான். பெரிசென்றால் ஒன்றரை அடியை ஆரையாகக் கொண்டு ஒரு முழு வட்டத்தைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். அவ்வளவு பெரிய PIZZA.

அவன் எனது மேசையைத் துப்புரவு செய்தான். நடுவில் அந்தப் பெரிய PIZZA வை வைத்தான். மேசையைச் சுற்றி மேலும் நான்கு நாற்காலிகளைப் போட்டான். தட்டுக்களையும் நாற்காலிகளுக்கெதிரே போட்டான். முள்ளுக்கரண்டி கத்திகளையும் அருகில் வைத்தான். எல்லாவற்றையும் வைத்துவிட்டு என்னை ஒரு முறை பார்த்து புன்னகைத்தான். பின்னர் வெளியே வெளியே எட்டிப்பார்த்துக் கொண்டு யாரையோ எதிர்பார்த்தான்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் தானோ "ஓடர்" கொடுத்தேன். பின்னர் ஏன் எனது மேசையில் வேறு யாருக்கோ இவன் ஒழுங்கு செய்து காத்திருக்கிறான்? யோசித்த வண்ணம் இருந்தேன். அத்துடன் மாபெரும் PIZZA வைப் பார்க்கப் பயமாகவும் இருந்தது.

சிறிது நேரத்தின் பின் அவன் என்னையே பார்க்க ஆரம்பித்தான். நானும் அவனையே பார்த்தேன். எங்கே எனது PIZZA என அவனைக் கேட்கலாமா என நினைத்து அவனைப் பார்க்க.... அவனும் என்னருகில் வந்து கொச்சையான ஆங்கிலத்தில்

" அவர்கள் வரமாட்டார்களா?" என்று கேட்டான்.

"யார் அவர்கள்?" என்றேன் நான்.

"உங்கள் குடும்பம்" என்றான். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. என் குடும்பமா...? எதுக்கு அவர்கள் இங்கே வரவேண்டும்? நான் தனியாகத் தானே இங்கே வந்தேன் இவன் என்ன கேட்கிறான்? ஏன்?. நான் குழம்பிக்கொண்டிருந்தேன். அவன் மீண்டும் சற்றுப்பெரிதாக " அவர்கள் எங்கே?" என்றான். இப்பொழுது மற்ற மேசைகளில் இருந்தவர்களும் இங்கே பார்க்க ஆரம்பித்தனர்.

"நான் தனியாகவே இங்கு வந்தேன். எங்கே என் PIZZA ?" என்று கேட்டேன் அவனிடம்.

அவன் PIZZA வைச் சுட்டிக் காட்டி இது தான் உன் PIZZA என்றான்.

இந்த மாபெரும் PIZZA வா எனக்காக? நான் பிரமித்தேன். அவனை நோக்கி

"இது எனக்குப் பெரிது என்னால் இதை உண்ண முடியாது" என்றேன்.

உடனே அவன் "விபர அட்டையை எடுத்து நான் ஓடர் கொடுத்த PIZZA வைச் சுட்டிக்காட்டி இதைத் தானே நீ ஓடர் செய்தாய் என்றான். நான் ஆம் என்றேன். அவன் சிரித்துவிட்டு வடிவாக வாசித்துப் பார் என்றான்.

நானும் உற்றுப்பார்த்தேன். அங்கே கீழே சிறிய எழுத்துக்களில் FAMILY PIZZAA FOR 5 PERSONS (குடும்பப் PIZZA 5 பேர்களுக்கு உரியது) என்று எழுதப்பட்டிருந்தது.

அப்போது எனது தவறு புரிந்தது. நான் அவசரத்திலும் பசியிலும் விலைகூடிய PIZZA வை ஓடர் கொடுத்தேன் அதற்குக் கீழே உள்ளதை வாசிக்கவில்லை. இப்போது என்ன செய்யலாம். என்று தெரியவில்லை. அவனையே கேட்டேன்.

"I am Sorry. What Can I do?
(என்னை மன்னி, இப்போ என்ன செய்வது?)" அவன் சொன்னான்.

"மேசையில் பரிமாறியதை நாங்கள் திரும்ப ஏற்பதில்லை. இதற்கான பணத்தை நீ கட்ட வேண்டும். உன்னால் முடிந்தவற்றை உண். மீதியை வை நாங்கள் வீசிவிடுகிறோம்." என்று

சரியாப் போச்சு இத்தாலியின் முதல் அனுபவமே இப்படியா....?

அந்த மாபெரும் PIZZA வை நான் இதுவரை கண்டதே இல்லை. பசிவேறு வயிற்றைப் பிடுங்கிக்கொண்டிருந்தது. அதை விட எல்லா மேசைக்காரர்களும் என்னையே பார்த்துக்கொண்டிருந்தனர். பணியாள் ஒரு சிரிப்புச் சிரித்து விட்டுப் போய்விட்டான். சரி, இனி என்ன செய்வது? கொஞ்சம் அந்தப் PIZZA வை வெட்டி ஒரு துண்டை எடுத்துச் சாப்பிடுவோம். இது தான் விதி என்று நினைத்து கத்தியை எடுத்து வெட்ட ஆரம்பித்தேன். அப்போது, எதிர் மேசையிலிருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த இரு இளம் இத்தாலியப் பெண்கள், தங்கள் Billஐக் கட்டி விட்டு வெளியேற ஆயத்தமானார்கள். அவர்களில் ஒருத்தி ஆரம்பத்திலிருந்தே என்னைத் தன் பார்வையால் 'வெட்டிக்' கொண்டிருந்ததை நானும் சற்று அவதானித்திருந்தேன்.

அவர்கள் வெளியேறும் போது அந்தப் பெண் என்னை நோக்கி வந்தாள் வந்து என்னருகே குனிந்து.

"நீ மெலிந்தவனாய் இருக்கிறாய் இப்படிச் சாப்பிட்ட பின்னரும் எப்படி நீ மெலிவாக இருக்கிறாய்? இதன் இரகசியம் என்ன?" என்றாள்

உடனே எல்லா மேசைக்காரர்களும் 'கொல்' என்று சிரித்தார்கள். எனக்கு அசடு வழிந்து கொண்டிருந்தது. அவமானத்தில் ஒரு புழு போல் நெளிந்தேன்.

* * * *

இத்தாலியின் 'மிலான்' நகரமும் பெரிய நகரந்தான். அங்கும் பார்ப்பதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன. நான் 'மிலான்' ஐப் பார்ப்பதை அதிகம் விரும்பவில்லை. எனது இலக்குத்தான் 'வெனிஸ்' ஆயிற்றே.

எனது car 'வெனிஸ்' நோக்கி அதன் திசையில் இத்தாலியின் பெருந்தெருக்களில் நகர்ந்து கொண்டிருந்தது. இத்தாலிப் பெருந்தெருக்களில் அதிகம் பாரிய கட்டுப்பாடுகள் இல்லை. இதனால் அதில் car ஐ செலுத்துவது சற்றுச் சிரமமாக இருந்தது.

'மிலான்' இல் இருந்து 4மணித்தியாலயத்தில் 'வெனிஸ்' ஐ வந்தடைந்தேன் கடல் மணத்தது. வாசலிலேயே ஒரு 9 மாடித் தரிப்பிடம் (parking place) இருந்தது. ஆயிரக்கணக்கான car களை ஒரே நேரத்தில் அங்கு நிறுத்தலாம். ஆனால் அங்கு இடம் பிடிப்பதற்கு நீண்ட வரிசை இருந்தது. ஏற்கனவே நிறுத்தியிருந்தவர்கள் ஒரு வழியால் ஒவ்வொன்றாக வெளியேற புதிதாய் நிறுத்தப் போகிறவர்கள் ஒருவழியால் உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள்.

சுமார் 500 car கள் பின் தள்ளி நான் எனது car இல் வரிசையில் நின்றுகொண்டிருந்தேன். ஒரு மணித்தியாலயத்தின் பின்னர் parking place கிடைத்தது. நான்கு நாட்கள் அங்கு park செய்யக்கூடிய சீட்டை வாங்கிக் கொண்டு தோள் பையுடன் 'வெனிஸ்' வாசலில் நின்றேன்.

ஒரு பெரிய ferry (கப்பல் படகு) வெனிஸ்சினுள் எம்மை இட்டுச் சென்றது. அப்பாடா பிரமிப்புத் தாங்க முடியவில்லை. கடலுக்குள்ளே ஒரு நகரம் நூற்றாண்டுகளாக நிமிர்ந்து நிற்கின்றது.

அந்நியப்படையெடுப்புகளுக்குப் பயந்து பாதுகாப்புத்தேடி தனது மக்களுடன் அப்படியே இடம் பெயர்ந்து சில நூற்றாண்டுகளின் முன்னர் கடலுக்குள் வாழ்வோம் என ஒரு மன்னன் நினைத்து தன் மக்களின் உதவியுடன் கடலைக் குடைந்து பெரிய நகரத்தை அமைத்து வாழ்ந்திருக்கின்றான்.

அந்த மன்னனின் துணிவும் அந்த மக்களின் அயராத உழைப்பும் கடலினுள் வீடுகட்டி வாழ முடியும் என்ற நம்பிக்கையும் என்னைப் பிரமிப்பிலாழ்த்தின.

இவ்வளவு. காலமாக எவ்வாறு இந்தக் கட்டடங்கள் கடலரிப்புக்கு ஈடு கொடுத்து இன்றும் புதிய பொலிவுடன் காட்சியளிக்கின்றனவே........? கடலரிப்பைத்தடுப்பதற்காக அவர்கள் பயன்படுத்திய கற்களும், தூண்களும் முற்றிலும் **Marble** கற்கள். இவ்வளவு **Marble** கற்களை எங்கே பெற்றார்கள் இவர்கள். கடலுக்கடியில் எப்படி இவ்வளவு பெரிய கட்டடங்களைத் தாங்கக் கூடிய அத்திவாரங்களை அமைத்தார்கள்? எனக்குப்பிரமிப்புக் கூடிக்கொண்டு போனது. நான் உண்மையில் பூமியில் தான் நிற்கின்றேனா.....? ஏதோ ஒரு கனவுலகத்தில் நிற்பது போன்ற பிரமை எனக்கு ஏற்பட்டது.

நான் வெனிஸ்சில் கால் பதிக்கையில் மாலை 5.30 மணி. மாலைச் சூரியனின் செம்மஞ்சள் கதிர்கள் கடலிலும் கட்டடங்களிலும் பட்டுத் தெறித்தும்...... ஒரு செம்மஞ்சள் நிறமான நகரமாக அது காட்சியளித்தது. இப்படி ஒரு நகரத்தை நான்

## பாகம்-18

பார்த்ததே இல்லை. எவ்வளவு அற்புதமான காட்சி அது.

என்னுடன் **Ferry** யில் வந்தவர்கள் ஏனோ அவசரப்பட்டார்கள். இந்த அற்புதமான காட்சியை விட்டுவிட்டு ஏன்தான் அவர்கள் இவ்வளவு அவசரப்படுகிறார்களோ தெரியவில்லை. நான் ஒருவரை விசாரித்தேன்.

அவர் சொன்னார் -7.00 மணிக்கிடையில் **Hotel** கள் **Book** பண்ண வேண்டும் என்று. அப்போதுதான் நானும் விழித்துக் கொண்டேன். நான் தங்குவதற்கும் ஒரு இடம் வேண்டுமே.... நானும் ஒரு **Hotel** ஐத் தேடி ஓடினேன்.

(அடுத்தவாரம் பார்ப்போம்)

---

# சு.க. ஆதரவு துறைமுக ஊழியர் சங்க உயர் பிரதிநிதிகள் பதவி விலகல்

**-உட்பூசல்களே காரணம்-**

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவு துறைமுக ஊழியர் சங்கத்தின் பிரதம செயலர் சந்திரவங்ச பிரதித்தலைவர் ஜவன்சுனில் மென்டிஸ், உறுப்பினர் வீரசிங்க ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

சந்திரிகா கூட்டணி பதவிக்கு வந்ததில் இருந்து சங்கத்தில் ஏற்பட்ட உட்பூசல் தொடர்வதால் தாம் தொடர்ந்து பதவி வகிக்க விரும்பவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மேலும் பலர் தமது பதவிகளில் இருந்து விலகவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக சனாதிபதி சந்திரிகாவிற்கும், சங்கத்தின் தலைமைக்காரியாலயத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இவர் சுமார் 30 வருட காலமாக சங்கத்தில் பணியாற்றியதாகக் கூறப்படுகிறது.

# அநுராதபுரத்தில் ஐ.தே.க வினர் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம்

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் நேற்றுமுன் தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.அரசாங்கத்திற்கு எதிரான இவ் ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆதரவாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

விலைவாசி ஏற்றம் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமை போன்றவற்றைக் கண்டித்தே மேற்படி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது. (32)

# ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா பிணையில் விடுதலை

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா நேற்று முன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். இறக்குமதி செய்யப்பட்ட கூரைத் தகடுகளை முறையற்ற விதத்தில் கையாண்ட குற்றச்சாட்டின் பெயரில் இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். ஏழு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும், இரண்டு சரீரப் பிணையிலும் இவர் நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

# கைவேலைக்காக விலையுயர்ந்த பொருட்களை வாங்க நிர்ப்பந்தம்

**-பெற்றோர்கள் முறைப்பாடு-**

(கொழும்பு)

கைவேலைக்காக மாணவர்களை விலையுயர்நத பொருட்களை வாங்குமாறு நிர்ப்பந்திக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக பெற்றோர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

தெரணியகல தமிழ் மகாவித்தியாலயத்திலேயே மாணவர்கள் விலை கூடிய பொருட்களை வாங்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும், வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் எவ்வாறு இப்பொருட்களை வாங்க முடியுமென கேள்வி எழுப்பும் பெற்றோர் இது குறித்து இரத்தினபுரியில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சில் முறைப்பாடு செய்துள்ள போதிலும் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# 3,500 மலையக இளைஞர்கள் வேலைவாய்ப்பிற்காக இனம் காணல்

(கொழும்பு)

அரசாங்கத் துறைகளில் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்காக க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தரங்களில் சித்தியடைந்த சுமார் 3,500 மலையக இளைஞர்களை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இனங்கண்டுள்ளது.

இது குறித்து பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சர் முத்து சிவலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் மலையகத்தில் மூவாயிரத்து ஐநூறிற்கும் மேற்பட்ட நபர்கள் வேலை வாய்ப்பிற்காக விண்ணப்பிக்கும் தகுதி பெற்றுள்ள போதிலும், தற்போது அரச துறையில் 3,500 வெற்றிடங்கள் மட்டுமே காணப்படுவதாகவும், மலையகத்தில் சிறுவர்கள் பல்வேறு காரணங்களால் குறிப்பாக பொருளாதார கஷ்ரத்தினால் பாடசாலையை விட்டு விலகி விடுகின்றனர். எனினும் அநேக மாணவர்கள் உயர் தரத்தில் சித்தி பெற்று, பூர்த்தி செய்ய விருப்பமுடையவர்களாய் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

# ரயில் கொள்ளையில் ஈடுபட்ட குழு பொலிசாரிடம் சிக்கியது

வவுனியா கொழும்பு ரயில் பயணிகளிடம் தங்க ஆபரணங்களை கொள்ளையடித்து வந்த கொள்ளைக்குழுவினரை அநுராதபுரம் தம்பத்தேகம பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களில் இருவர் இளம் பெண்கள் எனவும் கொள்ளை அடிக்கப்பட்ட தங்க, நகைகளின் ஒரு பகுதியையும், இவர்களின் பாவனையில் இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். மதவாச்சிக்கும், மாகோவிற்கும் இடையில் ரயில் கொள்ளையில் ஈடுபட்டு வந்த இந் நால்வரும் அநுராதபுரம் நீதவான் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.




## 18

★சமாதானப் பேச்சிற்கு ஐ.தே.க.ஆதரவளிக்குமெனக் கூறியும் சனாதிபதி மௌனமாக இருப்பது கவலைக்குரிய விடயமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றக் கூட்டத் தொகுதியில் இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு.

★சிறிலங்காவில் புதிய பொலிஸ்மா அதிபர் சந்திராபெர்னாண்டோ யாழ்.விஜயம்.

★மட்டக்களப்பில் இளைஞன் ஒருவன் சுட்டுக்கொலை.

★அரியாலை, புங்கன்குளம் சந்தியில் ஏற்பட்ட வீதி விபத்தில் ஒருவர் பலி

★நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் தனது அண்மைய அமெரிக்க கனடா விஜயங்கள் குறித்துஅரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவிப்பு.




★தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சரை ஐரோப்பிய ஒன்றியச் செயலகத்தில் சந்தித்தனர்.


ஐரோப்பிய ஒன்றிய செயலகத்தில்

## 19

★சிறிலங்கா, இந்தியா பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் தினம் குறித்து துரிதமாகத் தீர்மானிக்கப்படுமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கொழும்பில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்களைச் சந்தித்தபின்னர் தெரிவிப்பு.

★மட்டு. மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராகப் போட்டியிட்ட கிங்ஸ்லி இராசநாயகம் இனம்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

★கொழும்பில் இடி மின்னல் காரணமாக வீட்டிலிருந்த மூன்று பேர் மரணம்.

★அரசாங்கத்திற்கு எதிராக ஐ.தே.க. கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

★படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் நான்காவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இப்படுகொலையின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி யாழ். பஸ்நிலையத்தின் முன்பாக அடையாள எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

★திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திருமலை. மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தைச் சந்தித்தனர்.


தளபதி சொர்ணத்துடன்...

★மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரி குளத்து மடுவில் இனம் தெரியாதோரின் தாக்குதலில் முஸ்லிம் ஒருவர் பலி.

## 20

★நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஒஸ்லோவில் சந்தித்தனர்.


ஒஸ்லோவில் சந்திப்பு

★திருமலை-அன்புவழிபுரத்தில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை.

★மின்சார சபை ஊழியர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## 21

★மட்டக்களப்பில் பல பிரதேசங்களில் தேசத்து ரோகி கருணாவின் கட்சிப் பதிவினை ஆட்சேபித்து மக்களின் பெரும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம் பெற்றன.

★போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் ஹொக்லண்ட் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவைச் சந்தித்தார்.

★வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடின் அரசாங்கத்தைப் பதவி கவிழ்ப்போமென ஐ.தே.கட்சி மாத்தறையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் தெரிவிப்பு

★பொருத்தமான சமஷ்டிமுறை மூலமே இனப் பிரச்சினையைத் தீர்க்கமுடியுமென அமெரிக்க ஹவாட் பல்கலைக்கழகப் பேராசிரியர் கொழும்பில் இடம்பெற்ற மாநாட்டில் தெரிவிப்பு

★சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சின் இராஜாங்கச் செயலாளர் அனித்தா டயறிக்கை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சுவீடனில் சந்தித்தார்.

## 22

★ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர் ஜேர்மன்நாட்டு இராஜாங்கச் செயலரைச் சந்தித்தனர்.


ஜேர்மன் இராஜாங்கச் செயலருடன்

★அமெரிக்க பசுபிக் பிராந்திய கட்டளைப் பீடத்தின் திட்டமிடல் இயக்குனர் மேஜர் ஜெனரல் கார்ல் எயிக்கன்பெலி மற்றும் லெப் கேணல் றிச்சட் எர்வன் மேஜர் வைற்பற்றிக், கப்டன் மக்மென் மக்கெற் ஆகியோர் அடங்கிய குழுவினர் யாழ் விஜயம்.

★ திருமலை அன்பு இல்ல நிர்வாகத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் மூன்று மாதங்களுக்கு ஒப்படைக்குமாறு திருமலை நீதவான் தெரிவிப்பு.

★ நோர்வேக்கு எதிரான பிரேரணையை பாராளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமய கொண்டுவர முயன்ற வேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்களின் முயற்சியினால் அது முறியடிக்கப்பட்டது.

★ செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் 13ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு கொண்டாடப்பட்டது.


13ஆம் ஆண்டு நிறைவில்...

## 23

★ பொருட்களின் விலை உயர்வு, மற்றும் அரசின் கொள்கைகளைக் கண்டித்து ஐ.தே.கட்சி சிலாபத்திலும், அனுராதபுரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

★ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்க நெறிக்கோவை ஒன்றை அறிமுகப் படுத்துவதற்கான தேவை எழுந்துள்ளதென மாகாண சபை உள்ளூராட்சி பிரதியமைச்சர் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தெரிவிப்பு.

★மருதமுனையில் மாணவர் தலையில் அடித்துக்கொலை

★சிங்கக் கொடி ஏற்றப்படாமல் வவுனியாவில் தேசிய மகளிர்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டி ஆரம்பம்.


வலைப்பந்தாட்டப்போட்டியில்

★ "அம்மா" இசைத் தட்டு வெளியீடு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.


இசைத்தட்டு வெளியீட்டில்

## 24

★ எமது மக்கள் அடைந்துள்ள விரக்தி நிலையை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறினோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் பி.பி.ஸிக்குத் தெரிவிப்பு.

★ 1987ஆம் ஆண்டுயாழ். சாவகச்சேரிப் பகுதியில் இந்திய இராணுவத்தின் வான் தாக்குதல் மூலம் படுகொலை செய்யப்பட்ட 40 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்களின் 17ஆம் ஆண்டு நினைவு தினம் தென்மராட்சியில் கொண்டாடப்பட்டது.

★ இடைக்கால நிர்வாக சபையைப் புலிகளிடம் ஒப்படைப்பது பிரிந்து செல்வதற்கான அங்கீகாரம் என மல்வத்த பீட மகா நாயக்கா சுமங்கல தேரரை அகில இலங்கை சமாதான நீதவான்களின் குழு ஒன்று சந்தித்த வேளை வலியுறுத்து.

★ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரொன் புரூவ் ஹொவ்டே ஐரோப்பாவிற்கு விஜயம்

★ சேது சமுத்திரத் திட்டத்தை சிறிலங்கா கடற்படையினர் எதிர்த்து தமது ஆட்சேப மனுவை வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளனர்.

★ வரவு- செலவுத் திட்டம் தயாரிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. அரசு உலக வங்கி, ஆசிய வங்கி உதவ மறுத்துவிட்டதே காரணம் என ஐ.தே கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

---

### படையினரால் அழிக்கப்பட்ட-
# இரண்டு கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு அடிக்கல் நாட்டல்

(பூநகரி)

பூநகரியில் 1991 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினரின் வலம்புரி இராணுவ நடவடிக்கையில் முற்றாக அழிக்கப்பட்ட ஞானி மடம், பள்ளிக்குடா ஆகிய பூ.ப.நோ கூட்டுறவுச் சங்கத்தின்இருகிளைகள் கடந்த 23ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்றது.

பள்ளிக்குடாவில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவை சுண்ணாவில் பாடசாலை அதிபர் ஆரம்பித்து வைக்க, பூநகரி கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் ந.பாலசுப்பிரமணியம் அடிக்கல்லை நாட்டினார். இதனைத் தொடர்ந்து அதிபர், பூநகரிப் பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிவபாதசுந்தரம், பள்ளிக்குடா கடற்றொழில் சங்கத் உபதலைவர், பூநகரி வர்த்தக சங்கத் தலைவர் பொ.ரவி, வ.இராசலிங்கம், மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

ஞானிமடத்தில் நடந்த அடிக்கல் நாட்டு விழாவில் பூநகரிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இராசன் ஆரம்பித்து வைக்க அதனைத் தொடர்ந்து ப.நோ.கூ சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு நெறியாளர் குழுவைச் சேர்ந்த நா. சுரேஸ்குமார், ஆசிரியர் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் இரா.செல்வராசா ஆகியோர் அடிக்கல் நாட்டினர். இந் நிகழ்வில் பொது மக்கள் பலர்கலந்து சிறப்பித்தனர்.(34)

---

### முல்லைஅரச அதிபர் ஜேர்மன் பயணம்

முல்லை மாவட்ட அரச அதிபா திருமதி இமெல்டா- சுகுமார் புலமைப் பரிசிலில் ஜேர்மன் சென்றுள்ளார். ஒரு மாத காலத்தின் பின்பு முல்லை மாவட்டம் வரவுள்ளார். இவருக்கான பதில் கடமையினை மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வ லிங்கம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (22)

---

# உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு வீதியொழுங்கு அறிவுறுத்தல்

முல்லைப் பிரதேச உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான சிறப்புக் கலந்துரையாடல் கடந்த சனியன்று முல்லைக் காவல்ப் பணிமனை தலைமைக்காவலர் பாஸ்கர் தலைமையில் ஆரம்பமானது.

இதில் வீதி ஒழுங்கு தொடர்பாகவும், உழவு இயந்திரத்தில் என்னென்ன உதிரிப்பாகங்கள். இருக்க வேண்டும் என்றும் முல்லைக் காவல் பணிமனைப் பொறுப்பாளர் குணேஸ்வரன் கருத்துரை வழங்கினார்.இதில் முல்லைப் பிரதேசத்தில் உள்ள சகல உழவு இயந்திர உரிமையாளர்கள், சாரதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.(20)

---

# தேசிய எழுச்சிப்பேரவையின் மாதாந்த சங்கமம்

தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கமம் கடந்த வியாழனன்று மாங்குளம் மகாவித்தியாலயத்தில் மாங்குளம் பிரதேச கோட்டச் செயலாளர் தலைமையில் ஆரம்பமானது.

பொது ஈகச் சுடரினை முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் சி.இலக்கியன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை மாங்குளப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அணியழகன் ஏற்றினார்.

கருத்துரைகளை தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுபபாளர் சஞ்ஜீவன், முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சி.இலக்கியன் ஆகியோர் வழங்கினர் மாங்குளம் தேசிய எழுச்சிப் பேரவையின் போராளிகள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் திறப்பு

(முல்லை)

கட்டடத்திணைக்களத்தின் முல்லை.மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் நேற்று முன்தினம் வடக்குக் கிழக்கு மாகாண கட்டடத் திணைக்கள நிறைவேற்றுப் பணிப்பாளர் நடராசலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு முல்லை நகரப்பகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தின் அடாவடித்தனத்தால் சிதைக்கப்பட்ட இக்கட்டடம் தற்போது நீர்ப்திட்ட நிதியினால் கட்டப்பட்டுள்ளது.

கட்டடங்கள் திணைக்களத்தின் முல்லை.மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் செ.ஜெயசீலன் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ நிர்வாகசேவைப் பணிப்பாளர் அம்பி ஏற்றினார்.

தமிழீழ தேசியக்கொடியினை முல்லை. மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றினார்.

மங்கல விளக்கினை யாழ். மாவட்ட பிரதம பொறியியலாளர் குகநேசன், கிளி.முல்லைப்பிரதம பொறியியலாளர் சுந்தரகுமார், கச்சேரி நிர்வாக அலுவலர் இரத்தினராஜா உட்பட பிரதம பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையினை அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் துரைலிங்கம் நிகழ்த்தினார்.

கருத்துரைகளை வடக்குக் கிழக்கு மாகாணப் பிரதிப்பணிப்பாளர் நடராசலிங்கம், யாழ்.மாவட்டப் பிரதம பொறியியலாளர் குகநேசன்,கடற்புலிகளின் முல்லை. மாவட்டப் பொறுப்பாளர் மா.ரங்கன், ஒப்பந்தக்காரர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வழங்கினார்கள்.

நன்றியுரையினை பிரதம எழுதுனர் ஜெ.செல்வன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் அரச,அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள், பணியாளர்கள், போராளிகள் எனப்பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# மின் வழங்கும் நடைமுறையில் புதிய நேர ஒழுங்கு

(முல்லை)

முல்லைத்தீவு நகரப்பகுதி மக்கள், வர்த்தகர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக புதிய நேர ஒழுங்கில் மின்வழங்கப்பட்டு வருகிறது.அதிகாலை 4-30 மணி தொடக்கம் காலை 6.00 மணி வரை காலை 8.30 மணிக்கு ஆரம்பித்து இரவு 10.00 மணி வரை ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 4.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும். மாலை 6.00 மணியிலிருந்து இரவு 10.00 மணிவரையும் புதிய நடைமுறைக்கமைவாக மின் வழங்கப்படுமென கரைதுறைப்பற்று விசேட_ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார். (20)




கிளிநொச்சி றோயல் கல்வி நிலையத்தினரால் நடாத்தப்பெற்ற பரிசளிப்பு விழா வின்போது நடைபெற்றகலை நிகழ்வில் கல்வி நிலைய மாணவர்களின் காவடி ஆட்டத்தினை படத்தில் காணலாம்.
(படம்-சோதி)

# சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவின் இரண்டாம் கட்ட சமூக நலப் பயிற்சி நெறி

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதாரத்திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடாத்தப்படும் சமூக நலப்பயிற்சிநெறியின் 2 ஆம் கட்டம் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சி மாவட்டம் கிளி வலயத்தில் கிளி/செந்திரேசா மகளிர் கல்லூரி,கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி ஆகியவற்றில் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 50இற்கு மேற்பட்ட மாணவர்களும் பாடசாலை ஆசிரியர்கள்,அதிபர்களும் கலந்து கொண்டனர் .மேலும் இப்பயிற்சி நெறியில் முதலுதவி, உடல் அமைப்பு தொழிற்பாடும், முதலுதவிச் செய்முறைகள், தொற்று நோய்கள்,சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல விரிவுரைகள் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர்,திட்ட இணைப்பாளர்,தலைவர் தொண்டர்கள் ஆகியோராலும் சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி நெறியில் முதலுதவி தொடர்பான கைநூல் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பங்குபற்றிய ஒவ்வொரு அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.மேலும் பயிற்சியை நிறைவு செய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும்,அதற்கான மருந்துகள்,உபகரணங்களும் சென்ஜோன்ஸ்அம்புலன்ஸ் படைப் பிரிவினரால் இத்திட்டத்தில் வழங்கப்பட்டதோடு, ஒவ்வொரு பாடசாலைகளிலும் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக்குழுக்கள் அமைகப்பட்டதோடு,பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ், சின்னங்கள் வழங்கும் ஒழுங்கும் சென்ஜோன்ஸ்அம்புலன்ஸ் படைப் பிரிவினரால் செய்யப்பட்டுள்ளது.

# கடற்றொழிலாளர் சங்கம் குமுழமுனையில் அங்குரார்ப்பணம்

(முள்ளியவளை)

கடற்றொழிலாளர் சங்கம் குமுழமுனைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் 100இக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் கடற்றொழிலில் ஈடுபட்டு பல அவலங்களை எதிர்நோக்கிய சம்பவங்களைக் கருத்திற் கொண்டு அப்பகுதி கடற்றொழிலாளர்களுக்கான புதிய சங்கம் ஒன்று குமுழமுனை வலய அரசியல் துறைப்பொறுப்பாளர் தெ.ஒளிச் செல்வனின் ஒழுங்குபடுத்தலில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

சங்கத்தின் செயற்பாடு தொடர்பாகவும், கடற்றொழிலாளர்களின் பெருமை, கடல் வளத்தின் முக்கியத்துவம் உள்ளடக்கிய கருத்துரையினை தண்ணீரூற்று வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் கி.தென்றல்மாறன் நிகழ்த்தினார்.

மேற்படி தெரிவு செய்யப்பட்ட கடற்றொழிலாளர் சங்கத்தினை முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத்துடன் இணைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வலயப் பொறுப்பாளர் ஒளிச்செல்வன் தெரிவித்தார். வலயப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற சங்கத் தெரிவுக் கூட்டத்தில் 75இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (ஆ)

# விவசாயிகளுக்கான பயிர்ச்செய்கைக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அக்கராயன்குளம், புதுமுறிப்புக்குளம், வன்னேரிக்குளம் ஆகியவற்றின் கீழ் 2004/2005 பெரும்போக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கான பயிர்ச்செய்கைக் கூட்டம்நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதனடிப்படையில் புதுமுறிப்புக் குளத்திற்கான பெரும் போகப்பயிர்ச் செய்கைக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதியன்று பிற்பகல் 3.00 மணிக்கு புதுமுறிப்பு விக்கினேஸ்வராவித்தியாலயத்திலும், வன்னேரிக் குளத்திற்கான பயிர்ச் செய்கைக் கூட்டம் எதிர்வரும் 2.11.2004 அன்று காலை 10.00 மணிக்கு வன்னேரிக்குளம் வித்தியாலயத்திலும், அக்கராயன் குளத்திற்கான பயிர்ச்செய்கைக் கூட்டம் 2ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கரைச்சிப்பிரதேச செயலக அக்கராயன் உபபணிமனையிலும் நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட குளங்களின் கீழ் 2004/2005 பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள காணி உரிமையாளர்கள் மற்றும் குத்தகையாளர்கள் அனைவரையும் அந்தந்த இடங்களில் நடைபெறும் பயிர்ச்செய்கைக் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி /கரைச்சிப்பிரதேச செயலர் செல்வி.க. சுலோஜினி வேண்டுகை விடுத்துள்ளார். (சோ,கு)

# காலபோக நெற் செய்கையாளருக்கு மூன்று நாள் பயிற்சி வகுப்பு

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச எல்லைக்குட்பட்ட முகாவில் கிராமம், கோயில் வயல் கிராம அலுவலர் பிரிவில் உள்ள காலபோக நெற்செய்கை செய்யும் விவசாயிகளுக்கான நெற்செய்கை சம்பந்தமான மூன்று நாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றுள்ளது.

பளைப்பகுதியில் போரூட் நிதியுதவியுடன் பச்சிலைப்பள்ளி தமிழீழ மேம்பாட்டு நிறுவனத்தினரின் அனுசரணையுடன் கடந்த 15,16,17 ஆம் திகதிகளில் இப் பயிற்சி வகுப்பு இடம் பெற்றுள்ளது எனப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தினர் தெரிவிக்கின்றனர். (11)


## பணிநிலை வெற்றிடம்

### அழகியல் கலாமன்றம் கிளிநொச்சி

**பதவி:-** செயற்திட்ட இணைப்பாளர்

**தகைமை:-** க.பொ.த.சா.தரம் சித்தி, க.பொ.த.உ.தரம் சித்தி ஆங்கில அறிவுள்ளவராகவும், உந்துருளி இயக்கக் கூடியவராகவும் இருப்பின் அவை மேலதிக தகைமைய க கொள்ளப்படும்.

**வயது:-** 18 வயதிற்கு மேறபட்ட பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 10.11.2004**

சுயவிபரத்துடன் விண்ணப்பம் அனுப்பப்படவேண்டிய முகவரி

**செயலாளர்,**
**அழகியல் கலாமன்றம்,**
**கிளிநொச்சி.** (சி.10286) **நிர்வாகம்**

## நாகபூசணி அம்மன் திருமணசேவை

**எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.**

**மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.**

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.
(சி-10580)

## நினைவகலா மூன்றாம் ஆண்டு நினைவுகளில்

| அன்னையின் மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 29 - 06 - 1975 |  | 01 - 11 - 2001 |

## அமரர் கோமுகி–பிரபாகரன்

(கொ.அ.த.க.பாடசாலை ஆசிரியை)

திதி 27–10–2004

ஆண்டு மூன்று போனதம்மா– ஆனால் ஆறவில்லை உன் அன்பு
முகம் சாந்தமான எங்கள் – ஜினாவே
சரிபாதி ஆயுள் தானும் வாழ்த்திடும் முன்காலன் கவர்ந்தானே
காற்றோடு கலந்த எம் கண்மணியே– காலமெல்லாம்
கரைந்துருகுகின்றோம்– காவியமே எழுந்து வாராயோ...

**என்றும் நினைவுடன் வாழும்**
**குடும்பத்தினர்,**
**4ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு.**

(5222)

# இல.இனப்பிரச்சினை குறித்து இந்தியாவின்

# கொள்கையில் மாற்றம் ஏற்பட மாட்டாது

## இந்து பத்திரிகை ஆசிரியர் ராம்

(கொழும்பு)

**இன நெருக்கடித் தீர்வில் திருப்பு முனையை ஏற்படுத்த வேண்டுமானால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்கிடையில் இரு தரப்பு கருத்தொற்றுமை ஏற்படுவது அவசியமென இந்து பத்திரிகையின் பிரதம செய்தியாசிரியர் என்.ராம் தெரிவித்துள்ளார்.**

இடைக்கால நிர்வாகம், இறுதி அரசியல் தீர்வு போன்ற விடயங்களில் அத்தகைய கருத்தொற்றுமை கட்டாயம் தேவையெனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற காமினி திசாநாயக்கவின் நினைவு தின வைபத்தில் கலந்து கொண்டராம், அங்கு சிறப்பு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்த அமைப்பாகக் கருதப்படுகின்றது. இதனால் இந்திய அரசாங்கம் இலங்கையின் சமாதான முயற்சிகளில் நேரடியாகப் பங்களிப்புச் செய்ய முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா கொண்டுள்ள கொள்கைகளில் மாற்றம் ஏற்படுவது மிகவும் அசாத்தியமான விடயமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிளர்ச்சிக்குழுக்களுக்கெதிராக கூட்டு நடவடிக்கை தேவை

## இந். பிரதமர் மன்மோகன்சிங்

(புதுடில்லி)

கிளர்ச்சிக்குழுக்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க அண்டை நாடுகள் ஒருங்கிணைந்து கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முப்படைத் தளபதிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்டு பேசும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எந்த இந்தியக் கிளர்ச்சிக் குழுவும் புகலிடம் தேடவோ அதன் போக்குவரவுப் பாதையை முழுமையாகத் தடை செய்ய வழிவகுக்க புதுடில்லி எத்தகைய ஒத்துழைப்பிற்கும் பேச்சிற்கும் தயாராக இருக்கிறது.முறையான அச்சுறுத்தல்களைத் தவிர தற்போது இந்தியா புதிய மற்றும் முறைசாரா சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. அணுசக்தி முன்னேற்றத்தில் அறியாத அபாயத்தை நீக்க இந்தியா நடவடிக்கை எடுக்கிறது.

அணுசக்தி ஆயுதங்களை புதுடில்லி முதலில் தாமாகப் பயன்படுத்தாது. முன்னெச்சரிக்கையுடனும், பொறுப்புடனும் புதுடில்லி இதைக் கையாளும்.இந்நிகழ்வில் கருத்துக் கூறிய இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி பாதுகாப்புப் படைகளின் தலைமைக் கட்டமைப்புக்களை ஒழுங்குபடுத்துவது பற்றி அரசியல் பொதுக் கருத்தை எட்ட மேலும் பேச்சுக்கள் நடத்த வேண்டும் எனக் கூறினார்.

நிகழ்வில் நிதியமைச்சர் ப. சிதம்பரம் கருத்துக் கூறுகையில், பாதுகாப்பிற்காக ஒதுக்கப்படும் நிதி ில் எந்தக் குறைப்பும் இருக்காது என்றார்.

# காவிரி நடுவர் மன்றத்தைத் திருத்தியமைக்கும் கர்நாடக அரசின் கோரிக்கை நீதி மன்றால் நிராகரிப்பு

(புதுடில்லி)

காவிரி நடுவர் மன்றத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற கர்நாடக அரசின் கோரிக்கையை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது. தற்போதுள்ள நடுவர் மன்றம் தனது நலன்களைக் கவனத்தில் கொள்ளாது போய்விடும் என்று கூறி கர்நாடக அரசு தனது மனுவில் இது குறித்த அதிருப்தியை வெளியிட்டிருந்தது.

ஆனால் நடுவர் மன்றம் மத்திய அரசினால் அமைக்கப்பட்டிருப்பதுடன் இரு மாநிலங்களுக்கும் சரிசமமான பிரதிநிதித்துவம் இருப்பதாகக் கூறி கர்நாடக அரசின் மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது. நிபுணர் குழு உரிய பரிசீலனைக்குப் பிறகு தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விடும்படி உத்தரவிட்டதால் மட்டுமே அது பாகுபாடு காட்டுகிறது என்று பொருள் கொள்ள முடியாது என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருக்கிறது. திருமதி ரூபா போல் தலைமையிலான இருவர் கொண்ட நீதிபதிகள் குழு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# பா. ஜ.கட்சியின் தே. சபைக் கூட்டம் அரசியல் தீர்மானங்கள் குறித்து ஆய்வு

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய சபைக் கூட்டத்திற்கு முதல் நாளான நேற்று வாஜ்பாய் உள்ளிட்ட கட்சியின் உயர் தலைவர்கள் புதுடில்லியில் கூடி தேசிய சபையில் எடுக்கப்பட வேண்டிய அரசியல் தீர்மானங்களை முடிவு செய்துள்ளனர்.

கட்சித் தலைவர் அத்வானி, ஜஸ்வந்சிங், வெங்கையாநாயுடு ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரச்சினை முக்கியமான கவனத்திற்குக் கொண்டு வரப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்

02 - 05 - 1973



இறைவன் அடியில்

13 - 09 - 2004

அமரர்

**பாலசுப்பிரமணியம் விமலசந்திரன்**

(ரூபன் – தம்பா)

அன்புடன் பழகி ஆதரவாய்ப்பேசி பண்புடன் வாழ்ந்த எங்கள் அன்புச் செல்வமே நீ மறைந்து எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உன்னை மறக்கவே மாட்டோம். ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

இன்று 27.10.2004ஆம் திகதி எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நல்லூர்
பூநகரி.

(5226)

தகவல்,
**குடும்பத்தினர்.**

## மகராஷ்டிராவில் யார் அரசு அமைப்பது

# காங்கிரஸ்– தேசியவாத காங்கிரசிற்கிடையில் பத்து நாட்களாக தொடர்கிறது இழுபறி

(புதுடில்லி)

மகாராஷ்டிராவில் அரசு அமைப்பது குறித்து காங்கிரஸ் கட்சிக்கும் தேசியவாதக் காங்கிரஸ் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் இதுவரை முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

தலை நகரில் நடைபெறுவதாக இருந்த தேசியவாதக் காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டு விடடது. இரண்டு கட்சிகளின் மூத்த தலைவர்களும் பேச்சுக் குறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்கள். இரண்டு கட்சிகளின் எம்.எல் ஏக்களும் கூடி நேற்று மும்பையில் தனித்தனியே கட்சித் தலைவர்களிடம் பேச்சுக்களுக்குத் தீர்வு காணும் பொறுப்பை விடுவதென்று முடிவெடுத்தார்.

மேலும் காங்கிரஸ் கட்சி சட்டப் பேரவைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை திருமதி சோனியாகாந்தியிடம் விடுவதாக காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றினார்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுப் பத்து நாட்கள் ஆன பின்னரும் கூடத்தீர்வு எதுவும் ஏற்படும் அறிகுறி தெரியவில்லை. பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று கட்சியின் மூத்த தலைவர் பிரபுல்பட்டேல் கூறியிருக்கிறார்.

மகாராஷ்டிராவில் ஒரு முதலமைச்சரோடு இரண்டு துணை முதலமைச்சர் பதவிகளை உருவாக்குமாறு தேசியவாத காங்கிரஸ் ஆலோசனை கூறியுள்ளது.

இந்த யோசனையை காங்கிரஸ் கட்சி தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

# இராமேஸ்வர மீனவரின் போராட்டம் அரசின் வாக்குறுதியையடுத்து முடிந்தது

(சென்னை)

இராமேஸ்வர மீனவர்கள் கடந்த 21 நாட்களாக மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொண்ட இந்திய மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென்று அரசாங்கம் உறுதியளித்ததையடுத்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டுமென்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 5ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட இந்திய மீனவர்களுடன் அரசு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்திய போதும் தோல்வியிலேயே முடிந்தது.

இதனையடுத்து மீனவர்களுக்கு டீசல் மீதான விற்பனை வரியை இரத்துச் செய்தல் மற்றும் மீன்பிடி விசைப் படகுகளில் பயன்படுத்தப்படும் உயர் வேக டீசல் எரி எண்ணெய்க்கும் மானியம் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டதுடன் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வுகான விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென்று அரசு உறுதியளித்ததையடுத்து இராமேஸ்வர மீனவர்களும் அவர்களுக்கு ஆதரவாகப் போராடி வந்த தஞ்சை, நாகை, புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களும் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுள்ளனர்.

இலங்கை கடற்பகுதிக்குள் மீன் பிடிக்க இந்திய அரசு ஆவன செய்து தர வேண்டும் என்றும் கச்சதீவு மீதான உரிமத்தை இந்தியா மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது நடத்தி வரும் தாக்குதல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் இராமேஸ்வர மீனவர்களால் முன் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கைகளுக்கு இந்திய அரசு சாதகமான முடிவு ஒன்றை அறிவிக்க வேண்டும் என்றும் இல்லையேல் அகதிகளாக இலங்கைக்குப் போகப் போகின்றோம் என்றும் இந்த மீனவர்கள் கூறியிருந்தது தெரிந்ததே

# எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியிலிருந்து படைகளை விலக்குவது பிரச்சினையைத் தீர்க்க உதவும்

## பாக். அதிபர் பர்வேஷ் முஷாரப் யோசனை

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில் கருத்துக்கணிப்பு எதுவும் நடத்துவதால் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு இருதரப்பிலும் காஷ்மீர் உட்பட்ட பகுதிகளை இனம் கண்டிருந்து அங்குள்ள படைகளை விலக்கிக் கொள்ளலாம் என்று அவர் யோசனை தெரிவித்திருக்கிறார்.

சென்றமாதம் நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன சிங்கைச் சந்தித்துப் பேசிய பிறகு இந்தியாவும், பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான வாய்ப்பைக் கண்டறிய இணங்கியிருப்பதால் இந்த யோசனையை தாம் தெரிவித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, முசாரப் வெளியிட்டுள்ள இந்த யோசனையைப் பத்திரிகை வாயிலாக இந்தியா விவாதிக்க விரும்பவில்லை என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செய்தித் தொடர்பாளர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இதை விவாதிப்பதற்கு தக்கவழி ஒருங்கிணைந்த பேச்சுவார்த்தைதான் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாக்பூர் டெஸ்ட் போட்டி


# டேமியன் மாட்டின் அபார துடுப்பாட்டம் ஸ்திர நிலையில் அவுஸ்திரேலியா அணி



இந்தியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று நாக்பூரில் ஆரம்பமானது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் அடம் கில்கிறிஸ்ட் முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவின் போது தனது முதலாவது இன்னிங்ஸிற்காக 7 விக்கெட்டுக்களை இழந்து 362 ஓட்டங்களைப் பெற்று ஸ்திரமான நிலையில் உள்ளது.



துடுப்பாட்டத்தில் அபாரமாக ஆடிய டேமியன் மாட்டின் 114 ஓட்டங்களையும் அவரை விட டரன்லிமன் 70, லாங்கர் 44 ஓட்டங்களையும் பெற இளம் வீரர் மைக்கெல் கிளார்க் ஆட்டமிழக்காது 73 ஓட்டங்களைப் பெற்று ஓட்டஎண்ணிக்கைக்கு வலுச்சேர்த்தனர்.

பந்து வீச்சில் மிகச் சிறப்பாகப் பந்து வீசிய முரளி கார்த்திக் 67 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவருடன் கும்ளே, சகீர்ஹான் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



நேற்று மட்டும் உதிரிகளாக 26 ஓட்டங்கள் இந்திய அணியால் விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளது. இது இந்திய பந்து வீச்சுச் சிறப்பாக அமைந்துள்ளதா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.

இன்றைய தினம் 400 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் இந்தியாவுக்கு இது பாரிய பின்னடைவாக அமையும்.



காரணம் முதலாவது இன்னிங்சில் 400 ஓட்டங்களைப் பெற்றால் போட்டியின் வெற்றிக்குக் காரணமான அடித்தளமாக அமைந்துவிடும் என்பது உண்மையான விடயம். இப் போட்டியில் அணித்தலைவர் கங்குலி, ஹர்பஜன்சிங், இர்பான்பதான் ஆகியோர் இடம்பெறவில்லை. அணித் தலைவராக ராவிட் செயற்படுகின்றார்.இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

# 1000 விக்கெட் வீழ்த்துவதே எனது இலக்கு

-முரளிதரன்



ஆயிரம் விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதே எனது அடுத்த இலக்கென சிறிலங்காவின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதனால் குறைந்தது ஆறு ஆண்டுகளாவது விளையாட உத்தேசித்துள்ளேன்.

ஒருவரின் திறமை எப்போதும் வெளிப்படும். சில வேளை அது மழுங்கிப்போகக்கூடும். அதுபோல் சாதனையும் படைக்கப்படும். பின் அந்த சாதனை முறியடிக்கப்படும். எதுவுமே எவரதும் ஆதிக்கத்திற்கு உட்பட்டதல்ல.

எனது சாதனையை அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் முறியடித்ததைப் பாராட்டுகிறேன். இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் விளையாடத் தகுதிபெற்று அணியில் தேர்வு செய்யப்பட்டால் மீண்டும் எனது திறமையை வெளிப்படுத்துவேன்.வாழ்க்கை எப்போதுமே நிச்சயமற்றது. இதனால் எனது விதியும் எப்படியிருக்கும் என்று என்னால் எதிர்வு கூற முடியாது. ஆனாலும் எனது திறமைக்கமைய செயற்படு வேன். தற்போது தோள் மூட்டில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற்று ஓய்வெடுத்து வருகிறேன். அது இப்போது குணமடைந்து வருகிறது. நியூசிலாந்து தொடரில் பங்கேற்கும் வாய்ப்பு 50 வீதம் உள்ளது எனவும் தெரிவித்தார்.




# தென்னாபிரிக்க அணியில் அதிரடி மாற்றம் அணியில் ஐந்து கறுப்பினவீரர்கள் இணைப்பு?

இந்தியாவுக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ள தென்னாபிரிக்க அணியில் 5 கறுப்பின வீரர்களைச் சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு கிரிக்கெட் சபை அதிகாரி ஜெரால்ட் மஜோலா தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக தென்னாபிரிக்க அணி வீழ்ச்சி கண்டதையடுத்து இந்த அதிரடி மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது. விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சருக்குப் பதிலாக உள்ளூர் அணியொன்றின் பயிற்றுனரான ரே ஜெனிங்ஸ் இணைத்துக் கொள்ளப்படுவர் என அறிவிக்கப்படுகிறது.

அவர் கறுப்பினத்தவர் என்பதால் மட்டுமன்றி உள்ளூர் போட்டிகளில் அவர் தனது திறமையை வெளிக்காட்டியவர் என்பதால் அவர் இணைத்துக் கொள்ளப்படுவார்.

இது தொடர்பாக தேர்வுக் குழுவுடன் கலந்தாலோசிக்கவுள்ளதாகவும் இது சாத்தியமாகாதவேளை நாம் மாற்று நடவடிக்கை எடுப்போம் என்றும் மஜோலா தெரிவித்துள்ளார். அதன்படி சார்ள்ஸ் லாங்வெல்ட் முதல்தர ஆட்டக்காரர் என்றும் ஒட்டோங்கோ சிறந்த சுழற்பந்து வீச்சாளராகவும் செயற்படுவதாக கூறிய மஜோலா வாசலு நெட்டல் (உள்ளூர் கப்டன்) அசிம் அம்லா ஆகியோர் தேசிய அணியில் இடம் பெறுவர் எனக் கூறியுள்ளார்.

# சிறிலங்காவுடனான இரண்டாவது டெஸ்ட் மேலும் ஒரு விக்கெட் காப்பாளர் தேவை



பொப்வூல்மார்

பாகிஸ்தான் கிரிக்கட் அணி பயிற்றுநர் பொப்வூல்மர் சிறிலங்காவுடனான 2ஆவது டெஸ்ட் போட்டிக்கு மேலும் ஒரு விக்கட்காப்பாளர் தேவையெனக் கோரியுள்ளார். சிறிலங்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் 201 ஓட்டங்களால் தோல்வியடைந்ததையடுத்து மேலும் ஒரு விக்கெட் காப்பாளரை நியமிப்பது பொருத்தமாயிருக்கும் என அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் கருதுவதாக அவர் தெரிவித்தார். மொயின்கான் காயம் காரணமாக முக்கோணப் போட்டிகளில் கலந்து கொள்ளாநிலையில் யுனுஸ்கான் பதில் விக்கட் காப்பாளராகக் கடமையாற்றினார். இது தொடர்பாக அணியுடனும் பயிற்றுநரிடமும் கலந்தாலோசனை செய்து முடிவெடுப்பதாக கிரிக்கட்சபைத் தலைவர் பாரி தெரிவித்தார்.

# இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு பேஸ்போல் பயிற்சி வழங்கத் திட்டம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அமெரிக்க பேஸ்போல் பயிற்றுவிப்பாளரிடம் பயிற்சிபெறவிருக்கிறது. இது கிரிக்கெட் போட்டிகளில் களத் தடுப்புக்குச் சிறந்த பயிற்சியாக அமையுமெனக் கூறப்படுவதால் இம்முடிவுக்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்றுநரான மைக்யங் இந்தியா, பல்ரிமோ, கிளிபுலாந்து வீரர்களுக்குப் பயிற்சியளித்தவராவார். இங்கிலாந்து வீரர்கள் அண்மைய போட்டிகளில் களத் தடுப்பின்போது நுட்பத்தையறியாது காயமடைவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிரிக்கெட் பற்றி தனக்குப் பெரிதாகத் தெரியாவிட்டாலும் களத்தடுப்பில் இந்தப் பயிற்சி நுட்பமான அறிவைத் தரும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பங்களாதேஷிற்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் நியூசிலாந்து அணி வலுவான நிலையில்

சிட்டகொங்கில் நடைபெற்று வரும் நியூசிலாந்து பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் நியூசிலாந்து அணி வலுவான நிலையில் உள்ளது.

நேற்று ஆரம்பமான இப்போட்டியின் முதல் நாள் ஆட்டநேர முடிவின் போது நியூசிலாந்து 3 விக்கெட்டுக்களை இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் ஆட்டமிழக்காது 137 ஓட்டங்களையும், ஸ்கொட் ரிஸ் 87 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப்பெற்றனர். பந்து வீச்சில் முகமட் ரபிக் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இன்று போட்டியின் இரண்டாம் நாள். முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து ஒரு இன்னிங்ஸ் 99 ஓட்டங்களால் பங்களாதேசைத் தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஸ்ரீபன் பிளெமிங் புதிய தேசிய சாதனை



நியூசிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் பங்களாதேஷிற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இரண்டு தேசிய சாதனைகளை ஏற்படுத்தியுள்ளார்.


முதலாவது சாதனை 86 டெஸ்ட் போட்டியில் முன்பதாக சாதனை நிகழ்த்தியிருந்த ரிச்சட் ஹட்லி 400 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இவரே உலகின் மிக அதிகமான விக்கெட்டை வீழ்த்தியவர் என்ற சாதனைக்குரியவராக இருந்தவர் இவரின் பின்னர் இந்தியாவின் கபில்தேவ் இந்த சாதனையை முறியடித்திருந்தார்.

ஆனால் இப்போது 87 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி அவருடைய சாதனையை முறியடித்துள்ளார் ஸ்ரீபன்பிளெமிங் அது மாத்திரமல்லாது 8 சதங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டாவது சாதனை இதற்கு முன்னர் அதிகப்படியான டெஸ்ட் ஓட்டங்களை குவித்திருந்த நியூசிலாந்தின் மாட்டீன்குரே 5444 ஓட்டங்களை குவித்திருந்தார். அந்த ஓட்ட எண்ணிக்கையை பிளெமிங் தாண்டியுள்ளார். மூன்றாவது விக்கெட்டுக்காக ரைரிசுடன் இணைந்து 204 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

# விளையாட்டை ஊக்குவிக்க விளையாட்டு உபகரணம் அன்பளிப்பு

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் டேபிள் டென்னிஸ் விளையாட்டை அறிமுகப்படுத்தி விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்குமுகமாக சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான டேபிள் டென்னிஸ் மேசைகளையும் டேபிள் டென்னிஸ் பந்துகளையும் இலங்கை டேபிள் டென்னிஸ் சங்கத்தின் தலைவரான பொலிஸ் அதிபர் தயா சமரவீரா, விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தீபனிடம் கையளித்துள்ளார்.

இது தொடர்பான நிகழ்வு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுப் பணிமனை வளவில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. அந்நிகழ்வில் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஏ.டபிள்யு. விமலராஜன் விளையாட்டு அதிகாரி ஏ.எஸ். குணரத்தினம், விடுதலைப் புலிகள் திருமலை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி, திருகோணமலைத்துறைமுகப் பொலிஸ் பொறுப்பதிகாரி இந்திக பெரேரா, திருமலை பொலிஸ் தலைமையக நிர்வாகப் பொறுப்பதிகாரி அஜித் வன்ஷநாதா ஆகியோரும் பங்குபற்றினர்.



**சிந்தனைக்கு**

மக்களின் உறுதிப்பாடு, சர்வதேச ஆதரவு மற்றும் சூழ்நிலைகள் தான் ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# அரிய வாய்ப்பு!

சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தனியொரு கட்சியால் முடியாதெனவும், இதற்குச் சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியமெனவும் பிரதம மந்திரி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளமையானது சிலகேள்விகளை எழவைப்பதாகவுள்ளது. அதாவது சகல கட்சிகளினதும் என்பது ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து வலுவிழந்துபோய்க் கிடக்கும் இடது சாரிக்கட்சிகள் வரையில் என்பதைக் குறிக்கின்றனவா? அன்றிப் பிரதான எதிர்க்கட்சியின் ஆதரவு தேவை என்பதைக் குறிக்கின்றதா? என்பது இதில் முக்கியமானது.

இனப்பிரச்சினைக்கு ஜாதிகஹெல உறுமயவில் இருந்து வலுவிழந்து போயுள்ள இடது சாரிக்கட்சிகள் வரையில் அனைவரது ஆதரவைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனைவரது அங்கீகாரமும் தேவை எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கருதுவாரேயானால், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வென்பது சாத்தியமற்ற தொன்றாகவே இருக்கும்.

ஏனெனில் இனப்பிரச்சினைக்குத் தீர்வென்பது பெரும்பான்மையோர் ஆதரவுடன் நிறைவேற்றப்பட முடியுமே ஒழிய ஒட்டுமொத்தமாக அனைவரும் ஆதரவுடனும் நிறைவேற்றப்படுதல் நடைமுறையில் சாத்தியமற்றதொன்று. ஏனெனில் ஜாதிகஹெல உறுமய, சிங்கள பூமி புத்திர போன்றவை இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை என்பது போன்ற நிலைப்பாட்டை எடுக்கக் கூடியவை.

இதேவேளை பெரும்பான்மையோர் ஆதரவுடன் ஒரு தீர்மானத்தை எடுப்பதும் நிறைவேற்றுவதும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் பேசிக்கொள்ளும் சனநாயக வழிமுறைக்கும் மாறுபடானதல்ல. சனநாயக மரபுகளுக்கும் விரோதமானதல்ல. இதுவே சாத்தியமானதாக இருக்கக் கூடியதும் ஆகும். இதனை விடுத்து அனைத்துக்கட்சிகளதும் ஆதரவு கிடைக்கப்பெற வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதே அர்த்தம் இல்லாத தொன்றாகிவிடும்.

ஆனால் பிரதமர் ராஜபக்ஷ குறிப்பிட்டது பிரதான எதிர் கட்சிகளினதும் இனப்பிரச்சினைகளுடன் தொடர்புடைய தமிழர் தரப்பின் ஒத்துழைப்புமாக இருப்பின் இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கி முன்னேறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. அத்தோடு அதுவே தான் அவரின் கூற்றிற்கு அர்த்தமெனில் தற்பொழுது அரசாங்கத்திற்கு இவ் ஆதரவு உடனேயே கிடைக்க வாய்ப்புண்டு.

அதாவது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி இலங்கை வரலாற்றில் இதுவரை எந்த எதிர்கட்சியும் எடுக்காத தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது. இதன்பிரகாரம் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் பட்சத்தில் அதற்கு ஆதரவு வழங்குவதெனவும், பேச்சுவார்த்தைக்கு எதிரான சக்திகள் அரசாங்கத்தைக் கவிழ்க்க முனைந்தால் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பதெனவும் அறிவிப்புச் செய்துள்ளது.

இதேவேளை, தமிழர் தரப்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான ஒட்டுமொத்தமான ஆதரவையும் வழங்கத் தயாரகவுள்ளது. அத்தோடு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு இனப்பிரச்சினைகள் தீர்வு நோக்கி முன்னேறிச் செல்கையில் அரசாங்கத்திற்கு வரும் ஆபத்துக்களில் அரசாங்கத்தைப் பாதுகாக்கவும் அவை உதவக்கூடியதொரு நிலையே உள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலை இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமே கிடைத்ததில்லை. இதேவேளை அரசியல் சூழ்நிலையிலோ போர்நிறுத்த சூழ்நிலையிலோ சிறிலங்காவில் மாற்றங்கள் ஏற்படின் இத்தகையதொரு சந்தர்ப்பம் மீண்டும் கிட்டும் என்பதும் இல்லை. இதேசமயம் தற்போது ஏற்பட்டுள்ள அரிதான சூழ்நிலையை விடுதலைப்புலிகள் இயக்கமும் ஐ.தே கட்சியும் அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டவும் தவறவில்லை.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவோ அன்றி ஆளும் ஐ.ம.சு முன்னணியினரோ இதுவரை அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மாறாகச் சமாதான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கும் புதிய புதிய முட்டுக்கட்டைகளைத் தோற்றுவிப்பவர்களாகவே உள்ளனர். அதுமட்டுமல்ல எதிர்க்கட்சிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் மீது நம்பிக்கை வைப்பவர்களாகவும் இல்லை.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வென்பது எத்தனை தூரம் சாத்தியமானது. அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரும் அரசாங்கம் ஒத்துழைப்பு தரத்தயாராகவுள்ளதாகக் கூறும் பிரதான எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளவில்லை. மாறாக இனப்பிரச்சினைக்கான தீர்வில் முரண்பட்டு நிற்கும் இனவாதக் கட்சிகளுடனேயே நெருங்கிய உறவை வளர்த்து வருகின்றது. இந்நிலையில் இனப்பிரச்சினைத் தீர்விற்கு அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பு என்பது எத்தனை தூரம் சாத்தியமானது. அதாவது ஆதரவு தெரிவிப்போரை அனுசரித்துப் போகாமல்ஆதரவு தேவை எனக் கோருவதில் மட்டும் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டிவிடப்போவதில்லை.

# அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அரசை கவிழ்க்க யாருக்கும் பலம் கிடையாது

## பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா

(கொழும்பு)

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு யாருக்கும் பலம் கிடையாது. இந்த அரசாங்கம் பாராளுமன்றத்தில் பாரிய பெரும்பான்மையைக் கொண்டுள்ளது எனச் சிறிலங்காவின் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தெரணியகலவில் நடைபெற்ற சிறிலங்கா சுகந்திரக் கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் பதவிக்கு வருவதாக கண்ட கனவு பொய்த்துப் போயுள்ளது.

இன்னும் இரண்டு வருடங்களுக்கு சனாதிபதியாக இருப்பதற்கான உரிமையை சந்திரிகா கொண்டுள்ளார்.

அவரது பதவிக் காலம் முடிவுறும் போது அரசியல் யாப்பு மாற்றம் செய்யப்பட்டு பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் சந்திரிகா பிரதம மந்திரியாகப் பாராளுமன்றிற்கு அழைத்துச் செல்லப்படுவார். ரணிலோ அல்லது அவரது கூட்டாளிகளோ புதிய பாராளுமன்றத்தில் பிரதமராக வருவதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

பொது மக்கள் கடந்த தேர்தல்களில் அவர்களை நிராகரித்தது போன்று எதிர்காலத் தேர்தல்களிலும் அவ்வாறு செய்வார்கள்.

பொருட்களின் விலைகள் அதிகரிப்பினால் மக்கள் வருந்துவதை அரசாங்கம் நன்கு உணருகின்றது. மக்களின் அதிக சுமையில் அது தோள் கொடுக்கின்றது என்றும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

# சில அரசியல் வாதிகள் தமக்கு வாக்களித்த மக்களை மறந்து விடுகின்றனர்

## மல்வத்தபீட மகாநாயக்கர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

சில அரசியல் வாதிகள் வாக்களித்து தம்மைத் தேர்ந்தேடுத்த வாக்காளர்களை மறந்து அதிகாரத்தால் தமது மகிழ்ச்சியையே குறியாகக் கொண்டுள்ளனர். மக்களை அசட்டை செய்கின்றனர். என மல்வத்த பீடத்தின் மகா நாயக்கர் தீப்பொற்றுவேவ சிறி சித்தார்த்த அமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

சென்ற ஞாயிறு நடைபெற்ற அகில இலங்கை சமாதான நீதவான்கள் சங்கத்தின் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் "மிகப் பெரிய அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவிற்கு ஆதரவளிப்பது தமது பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இன்றைய காலகட்டத்தின் உணர்வு மிக்க விடயங்களில் அரசியற் கட்சிகள் ஒரு பொதுவான தீர்மானத்திற்கு வரவேண்டும்.

அதிகாரத்திலுள்ள அரசியல் வாதிகளுக்கு மக்களின் ஆணையின்றி நாட்டைப் பிளவு படுத்தவோ அல்லது துண்டாடவோ உரிமையோ சுதந்திரமோ கிடையாது. மக்களை முட்டாள்களாக்க அரசியல் வாதிகள் முனையக் கூடாது" என்றும் மகாநாயக்க தேரர் மேலும் கூறியுள்ளார்.

# 60. இல. தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வலியுறுத்து

வரும் வரவுசெலவுத்திட்டத்தில தனியார் துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் நிதி அமைச்சர் சரத்அமுனுகமவிடம் வலியுறுத்திக் கூறியுள்ளது.

இலங்கையிலுள்ள 60 இலட்சம் தனியார் துறை ஊழியர்களுக்கும் இந்தச் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் வரவு செலவுத் திட்டத்திற்கு முன்பதாக அனைத்துத் தொழிற் சங்கங்களுடனும் பேச்சுக்களை நடத்த முன்வர வேண்டும் எனவும் அச் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு வழங்குவதென்பது கண்துடைப்பு

தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படப்போவதாகக் கூறப்படும் சம்பள உயர்வானது வெறும கண்துடைப்பாகும் என மலையக மக்கள் முன்னணியின் நிர்வாக செயலர் எஸ் அருள்சாமி தெரிவித்துள்ளார்

தற்சமயம் தோட்டத்துறையின் சில தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சங்கத்துக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் 135 ரூபா அடிப்படைச் சம்பளமாக வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தோட்டத துறை மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்பதே எஸ் அருள்சாமியின் கருத்தாகும். ஏற்கனவே தோட்ட தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 121 ரூபா வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தற்சமயம் மேற்கொள்ளப்படும் முயற்சியின் அடிப்படையில் ஏற்கனவே தேயிலை விலையுயர்வின் போது வழங்கப்பட்ட ஊக்குவிப்புப் பணமான 14 ரூபா சேர்க்கபட்டு அடிப்படைச் சம்பளமாக 135 ரூபா நிர்ணயிக்கபட்டுள்ளது என்பதே உண்மை நிலையாகும். இதேவேளை தொழிலாளர்கள், மாதத்தில் 75 வீத நாட்கள் வேலை செய்தால் மாத்திரம் மேலதிகமாக 45 ரூபா வழங்கப்படும் எனக் குறிப்பிட்ட பேச்சுவார்த்தையில் இணங்கப்பட்டுள்ளது

சாதாரணமாக எந்த ஒரு தொழிலாளியும் 75 வீத நாட்கள் மாதத்தில் வேலை செய்வர் என எதிர்ப்பார்க்க முடியாது எனவே அந்த 45 ரூபா எல்லோருக்கும் கிடைக்கும் என்பதில் யதார்த்தம் எதுவும் இல்லை. இந்த நிலையில் இங்கு தொழிலாளிகளுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை எனக் கூறியுள்ள மலையக மக்கள் முன்னணியின் நிர்வாக செயலர், மேலதிகமாகச் சேர்க்கப்படும் 14 ரூபாவுக்காக வழங்கப்படும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியான 1 ரூபா 80 சதமே தோட்டத தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் நன்மையாகும் என சுட்டிக் காட்டியுள்ளார். 1992 ஆம் ஆண்டு குறிப்பிட்ட . தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சங்கங்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் தோட்ட தொழிலாளர்களுக்குக் கிடைத்து வந்த வாழ்க்கைச் செலவுப்புள்ளி நிறுத்தப்பட்டது. இதனால் இன்று காணப்படும் வாழ்க்கைச் செலவுப் புள்ளியான 3684.7 என்ற அடிப்படையில் கிடைக்க வேண்டிய உரிய சமபளமான 350 ரூபாவையும் தோட்டத்தொழிலாளர்கள் கோரும் உரிமையை இழந்துள்ளார்கள் என்றும் எஸ் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

இதற்கு அப்பால் தோட்டத் துறையானது தனியாருக்குக் கையளிக்கப்பட்ட காலப்பகுதிக்கு முன்னர் அவற்றை நிர்வகித்து வந்த மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை பெருந் தோட்ட அபிவிருத்திக்கூட்டுத் தாபனம் என்பன அரசாங்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு 200 மில்லியன் ரூபா அளவில் வரியாகச் செலுத்தி வந்தன. ஆனால் தனியாரின் கையேற்புக்குப் பின்னர் எவ்வித வரியும் அரசாங்கத்திற்குச் செலுத்தப்படவில்லை. இதனைக் கருத்திற் கொள்ளும் போது இந்தத் தொகையானது பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு இலாபமாகவே கருதப்பட வேண்டும். எனவே இதனைப் பயன்படுத்தியாவது தொழிலாளர்களின் சமபளத்தை உயர்த்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

-செவ்விளநீர் பிடுங்குவதில் தர்க்கம்-

# வீட்டின் மீது கைக்குண்டுவீச்சு ஹபரதுவவில் மூவர்படுகாயம்

(கொழும்பு)

வீட்டின் மீது மேற்கொள்ளப்பபட்ட கிரனேட் வீச்சுத் தாக்குதலினால் மூவர் படுகாயம் அடைந்த சம்பவம் ஒன்று சிறிலங்காவின் ஹபரதுவ பொலிஸ் பிரிவில் உள்ள குருந்தவத்த என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

சென்ற ஞாயிறு காலை செவ்விளநீர் பிடுங்கியது தொடர்பாக ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தை அடுத்து பிற்பகல் நபரொருவர் இக்குண்டு வீச்சை நடாத்தியுள்ளார் என்றும், இதனால் வீட்டிலிருந்த மூவர் படுகாயம் அடைந்தனர். என்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

குண்டை வீசியநபர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# அமைச்சர் அதாவுல்லாவுக்கு எதிராக கிண்ணியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் அதாவுல்லா கிண்ணியாவிற்கு விஜயம் மேற்கொண்டவேளை கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டம் கிண்ணியாவில் கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டுவதற்காகவும், பொதுநூல் நிலையத்தைத் திறப்பதற்காகவும் சென்ற சமயமே மக்கள் கறுப்புக்கொடி கட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதன்போது விழா அமைப்பாளர்கள் கறப்புக்கொடிகளை அகற்ற முற்பட்ட போது அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதனைக்கட்டுப்படுத்த அவ்விடத்திற்கு இராணுவமும் பொலிசாரும் சென்றனர்.

இதையடுத்து நூல் நிலையம் திறப்பதற்குரிய சூழ்நிலை இல்லையெனக் கூறி பொலிசார் நூல்நிலையத்தைத் திறப்பதற்கான அனுமதியை வழங்க மறுத்துவிட்டனர்.

## ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராகவும் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறும் கோரி நேற்று ஐக்கிய தேசிய கட்சி கண்டியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். பி. திஸாநாயக்க கெகலியரம்புக்வெலஉட்பட்டவர்களுடன் பெருமளவு பொதுமக்களும் பங்கேற்றனர். இதன்போது உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவருக்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# 'விடுதலைப்புலிகள்' ஏடு இன்று வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்'பத்திரிகையின் புரட்டாதி-ஐப்பசி மாதத்திற்குரிய 119ஆவது குரல் 'இ.த.அதிகார சபை அடிப்படையின்றி பேச்சுக்கள் சாத்தியப்படப் போவதில்லை' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகின்றது.

'மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்' எனச் சொல்லும் ஆசிரியர் தலையங்கத்துடன் வரும் இவ்வேட்டில், பிரபுத்திரன் எழுதிய "ISGA : அவர்கள் பிரச்சினை வேறு எங்கள் பிரச்சினை வேறு" என்ற கட்டுரையும், சாரணன் எழுதிய 'தீர்வு காணாதிருப்பதற்காக தீர்வு பற்றிப் பேசும் அரசியல்' என்ற கட்டுரையும், எல்லாளன் எழுதிய 'அம்மையாரின் ஐ.நா. உரையும், அவரது கபட அரசியலும்' போன்ற அரசியல் கட்டுரைகளும் கலாநிதி க. சோமாஸ்கந்தன் எழுதிய 'சிறிலங்கா நீதி நிர்வாகமும், நீதிமறுப்பும்' என்ற கட்டுரையும், சுரேன் எழுதிய அமைதிக்கு அவமானம்' என்ற கட்டுரையும் இடம்பெறுகின்றன.

'இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த சிங்களத்தின் அருவருப்புகள்' என்ற வி. அருளாளன் எழுதிய கட்டுரையும், அம்பாறை வீரமுனைப் படுகொலை நினைவுக் கட்டுரையான 'சிதைக்கப்பட்டதொரு ஊரின் வாழ்வு' மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் வழமையான அம்சங்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகின்றது.

# தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் நாற்று வெள்ளி இதழ் வெளிவந்தது



தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் வெளியீடான 'நாற்று' சஞ்சிகையின் இருபத்தைந்தாவது வெள்ளி இதழ் வெளிவந்துள்ளது.

அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி அவர்களின் வாழ்த்துரையுடன் "மனுஷி"யின் 'இந்தப் பாடல்களையும் ஒருமுறை கேளுங்கள் கொற்றவையின் ஒளிவரும் காலம்' கவிதைகள் மற்றும் ஆதிலட்சுமி சிவகுமாரின் 'துயரம் சுமக்கும் பெண்கள்' தொடர் 2 கருணாகரனின் ஊடகங்களில் பெண் பெண்களின் ஊடகங்கள் கட்டுரை, இளம் ஓவியர் மதுமதியுடனான நேர்காணல் உட்படப் பல சிறப்பு அம்சங்களைத் தாங்கி இவ் வெள்ளி இதழ் வெளிவந்துள்ளது.

### கனேடிய...

சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கிகள் அகற்றப்பட்ட பின் புது மூன்று அங்கிகள் இவர்களுக்குக் கனேடிய உயர்ஸ்தானிர் காரியாலயத்தில் வழங்கப்பட்டுள்ளன.

### தனி...

கையாகும். குற்றம் எதனையும் செயய்யாத சபாநாயகரை விலக்க முயற்சிப்பது சனநாயக விரோதச் செயலாகும் என்றும் ஜி எல் பீரிஸ் குறிப்பிட்டார். இது நடைபெறுமானால் குற்றச்சாட்டு எதுவும் இன்றிச் சபாநாயகரை விலக்கிய முதல் சனநாயக நாடு இலங்கையே என்ற அவப்பெயர் ஏற்படும் அதே நேரம் வெளிநாடுகள் மத்தியில் இலங்கையின் பெயருக்குக் களங்கம் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (32)

### அரசாங்க...

சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. கூட்டு ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணான வகையில் அமைந்துள்ளது எனக் கருதியே தாம் இம் முடிவை எடுத்திருப்பதாக ஜே.வி.பி. யினர் தெரிவித்திருக்கின்றனர். எனினும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எப்போது நடைமுறைக்கு வரும் என்பது பற்றி ஜே.வி.பி. யினால் திட்டவட்டமான முடிவுகள் ஏதும் அறிவிக்கப்படவில்லை. (32)

## பொலிசாரால் கைது

நீதிமன்றக் கடடடத்திலேயே செப்புக் குழாய்களைத் திருடிய நபரொருவரை அனுராதபுரப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அனுராதபுர நீதவான் நீதிமன்றக் கட்டடத்தின் அறையை உடைத்து உட்புகுந்து அதனுள் ளிருந்த கசிப்பு காச்சப் பயன் படுத்தப்படும் செப்புக் குழாய்கள் நூற்று ஐம்பதைத் திருடிய இஸ் மாயில் சைபு என்ற குறித்த நபரைப் பொலிசார் கைது செய்து நீதவான் முன் ஆஜர்ப்படுத்தினர்.

### சுவிஸ்...

களில் தூண்டிவிடுகின்ற செயல்களில் தேச விரோத சக்திகளும் அதற்குத் துணையாக இருக்கின்ற ஏவலாளிகளும் அண்மைக் காலமாக ஈடுபட்டு வருவதை அனைவரும் அவதானிக்க முடிகின்றது.

இச்சம்பவம் பூரண இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடந்து வருகின்றது. இச்சம்பவத்திற்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும். இதனை இலங்கை அரசு தீவிர கவனத்திற்கொண்டு புலன்விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும். அதேவேளை இச்செயலை தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டிப்பதோடு அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றார்கள். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கொலை தொடர்பான செய்தி 5ஆம் பக்கத்தில்)

### ஆட்டோ...

ரணைகளை மேற்கொள்ளலாம் என்றும் வவுனியா நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அடையாளம் காணப்பட்டவர்கள் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் என்பதும் இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்களும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் என்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர்

அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர்கள் வீரசிங்க, மஞ்சுல ஜெயசேன, திசாநாயக, ஆகியோர் ஆவர்கடந்த12ஆம்திகதி வவுனியா நகர் பகுதியில் இருந்து வாடகைக்கு ஆட்டோவினை அமர்த்தி செட்டிக்குளம் அரசடிக்குளம் பகுதிக்குக் கொண்டு சென்ற ஆட்டோச்சாரதி கொலை செய்யப்பட்டார். சம்பவத்தில் கொல்லப்பட்டவர் மதினாநகர் பூந்தோட்டத்தைச் சேர்ந்த கப்புடையார் மொகமட் அமர் (வயது 27) என்று அடையாளம் காணப்பட்டார் என்பது தெரிந்ததே. (21)


### நாவற்...

வந்தவர்களான அருணகிரி தேவரஞ்சன் (வயது 35) அவரது மனைவியான தேவரஞ்சன் கிருஷ்ணகுமாரி (வயது 28) பிள்ளைகளான விதுஷன் மற்றும் துகிஷன் (வயது 7) ஆகியோரும் படுகாய மடைந்தவர்களில் நால்வராவார்.

இவர்களுடன் படுகாமயடைந்த ஏனையோர் தொடர்பான விபரம் வருமாறு நாகலிங்கம் பூரணம் (வயது 66) மாத்தளை, சுப்பிரமணியம் கோமளவல்லி (வயது 60) புங்குடுதீவு, பூவிலிங்கம் சந்திரகுமார் (வயது 46) (கொக்குவில்) மனைவியான சந்திரகுமார் விக்னேஸ்வரி (வயது 44) மாரிமுத்து சிவராசா (வயது 50) கந்தையன் சசிதரன் (வயது 30) வான்சாரதியான இராசா தங்கராசா (வயது 50) கூலர் வாகனச் சாரதியான மன்சூர் ஆப்தின் (வயது 37) வவுனியா,சந்திரகுமார் கிருபனராசா கொக்குவில்.

இதேவேளை படுகாயமடைந்தவர்களில் சிலரது உடல் நிலை மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(27)

# சிரித்திரன் சஞ்சிகையின் மீள் வருகை அறிமுக விழா



(அலுவலக செய்தியாளர்)

சிரித்திரன் சஞ்சிகையின் மீள் வருகை அறிமுக விழா நேற்றுக் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் ஓவியர் ராஜன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வில் மங்கல விளக்கினைச் சமாதான நீதிபதி வைத்தியர் தாமோதரம்பிள்ளை ஏற்றிவைக்க,தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஏற்றிவைத்தார். விழாச் சுடரினை போராளி தமிழ்க்கவி ஏற்றிவைக்க, மாமனிதர் சிரித்திரன் சுந்தர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் மாலை அணிவித்தார்.வரவேற்புரையினைப் புலிகளின் குரல் செய்தி ஆசிரியர் தவபாலன் நிகழ்த்தினார். தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை நா. யோகேந்திரநாதன், வளவை வளவன், நிலாந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையினை தமிழ்ச்சங்கச் செயலர் பரமநாதபிள்ளை வழங்கினார். (சோ,கு)

# முச்சக்கரவண்டிச்சாரதி வவு. வில் பொலிசாரால் கைது

(செட்டிகுளம்)

வவுனியாவில் முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

மாலை விடுதலைப்புலிகளின் அரசியல் துறை மகளிர் போராளிகள் இருவர் வேறு ஒரு பெண்ணை மன்னார் வீதியில் இருந்து தம்முடன் மேற்படி முச்சக்கர வண்டியில் அழைத்து சென்றாதாகவும்

அந்தப் போராளிகளையும் பெண்ணையும் அரசியல் துறை மகளிர் காரியாலயத்தில் இறக்கி விட்டு வந்த போது மேற்படி முச்சக்கரவண்டியின் சாரதி பொலிசாரால் கைது செய்யப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது இதனை வவுனியா அரசியல் துறையினர் உறுதி செய்துள்ளனர் இது தொடர்பாக பொலிசாருடன் தொடர்பு கொண்ட போதும் விபரங்கள் எவையும் பெறமுடியவில்லை. (21)

# தேர்தல் சட்ட மாற்றல்கள் குறித்து இன்று வவுனியாவில் கூட்டம்

(செட்டி குளம்)

தேர்தல் சட்டங்களை மாற்றுவது தொடர்பான விசேட கூட்டம் ஒன்று வவுனியாவில் இடம் பெற இருப்பதாக வவுனியா மாவட்டத்தின் சர்வோதைய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் கே. கனகரட்னம் தெரிவித்துள்ளார் இந்த கூட்டம் இன்று வவுனியா பூங்கா வீதியில் உள்ள உள்ளூராட்சி மண்டபத்தில் இடம் பெறும் என்றும் இதில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வவுனியா மன்னார் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பல முக்கியஸ்தர் கலந்து கொள்ளவுள்ளனர் எனக் கூறப்பட்டுகிறது. சர்வோதைய அமைப்பும் பெப்ரல் அமைப்பும் இணைந்து தேர்தல் சட்டத்தை மாற்றுவது தொடர்பாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் இதற்கான கருத்துகளை அறிந்து கொள்ளும் முகமாகவே மேற்படி கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)


## பொதுக்கூட்டம்

**பனங்காமம் பற்று ப.நோ.கூ.சங்கம் வவுனிக்குளம் (வ.து) வருடாந்தப் பொதுக்ககூட்டம் 2004 கார்த்திகை மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை.**

பனங்காமம் பற்று ப.நோ.கூ.சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20.11.2004 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தலைவர் திரு.அ.தர்மகுல சிங்கம் அவர்கள் தலைமையில் சங்க தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

*பொதுச் செயலாளர்,*
பனங்காமம் பற்று,
ப.நோ.கூ.சங்கம்,
வவுனிக்குளம்.

(4140)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.